விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு Registered as a News paper in Sri Lanka

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

# வலம்புரி
# VALAMPURI

நங்கையர் விரும்பும் நவீன
டிசைன் தங்க
நகைகளுக்கு...


74, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 03 வியாழக்கிழமை (18.07.2002) தொலைபேசி 3378 ஒலி 211

### புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து

# ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள்

# தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசினர்

## சமாதானம் ஏற்பட உதவுவதாகவும் உறுதி

(கிளிநொச்சி)

**ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த ஆறு தூதுவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் நேற்றுக்காலை சந்தித்து சுமார் இரண்டரை மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.**

இத்தாலி, ஜேர்மன், பிரான்ஸ், பிரித்தானியா, சுவீடன், நெதர்லாந்து ஆகிய ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள் நேற்றுக்காலை கண்டி வீதி ஏ-9 பாதையூடாக கிளிநொச்சிக்குச் சென்றார்கள்.

இலங்கைக்கான இத்தாலியத் தூதுவரும், ஐரோப்பிய நாடுகளின் தூதுக்குழுத் தலைவருமான மன்ஸ் செஸ்ரர் கூறா தலைமையில் சென்ற குழுவை கிளிசொச்சியில் விடுதலைப்புலிகளின் பிரமுகர்களான புலித்தேவன், தொல்காப்பியன், ஜோர்ஜ் ஆகியோர் வரவேற்று விடுதலைப் புலிகளின் அரசியல் நடுவப் பணியகத்திற்கு அழைத்துச் சென்றனர்.

நடுவப் பணியகத்தில் இடம் பெற்ற பேச்சுவார்த்தையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அரசியல் துறைநிர்வாகப் பொறுப்பாளர் தங்கன், அரசியல் துறையைச் சேர்ந்த புலித்தேவன்

(08ம் பக்கம் பார்க்க)

# கடற்புலிகளின் 10 வது ஆண்டு நிறைவு விழா

### தலைவர் பிரபா பங்கேற்பு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அணியின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் முல்லைத்தீவில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

முல்லைத்தீவில் திறந்த வெளி அரங்கில் அமைக்கப்பட்ட விசேட அரங்கில் கடற்புலி போராளி பிரமிளா தலைமையில் மாலை 5 மணிக்கு நிறைவு விழா நிகழ்வுகள் ஆரம்பமானது.

இந் நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

நிகழ்விற்கு தலைவர் வருகை தந்த போது கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தலைவருக்கு செங்கம்பள வரவேற்பளித்து மேடைக்கு அழைத்துச் சென்றார்.

(08ம் பக்கம் பார்க்க)

# சுயாதீன ஆணைக்குழுவின் விசாரணை

# நேற்று 2வது நாளாக நடைபெற்றது

### தீவகப் பொறுப்பாளர் செம்மணன் வாக்கு மூலமளித்தார்

(அலுவலக நிருபர்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தீவகப் பொறுப்பாளர் செம்மணன், மற்றும் உறுப்பினர் தயாளன் ஆகிய இருவரும் வேலணையில் வைத்து தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் சுயாதீன ஆணைக்குழு தனது இரண்டாவது நாள் விசாரணையை நேற்று நடத்தியது.

சுயாதீன ஆணைக்குழுவின் தலைவரும் முன்னாள் விமானப் படைத் தளபதியுமான எயார் மார்ஷல் ஹரி குணதிலகா தலைமையில் யாழ் செயலகத்தில் விசாரணைகள் நடைபெற்றது.

இவ் விசாரணையின்போது தாக்குதலுக்கு உள்ளான தீவக அரசியல் பொறுப்பாளர் செம்மணன் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை வாக்குமூலம் அளித்தார்.

செம்மணனின் வாக்குமூலத்தை அடுத்து இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகாவும் வாக்குமூலம் அளித்தார்.

நேற்றைய விசாரணையின்போது ஆறு பொதுமக்கள் வாக்குமூலம் அளிக்க வந்திருந்தபோதும் நான்கு பொதுமக்களே வாக்கு மூலம்

(08ம் பக்கம் பார்க்க)

# காரைநகரில் புலிகளுக்கு மக்கள் அமோக வரவேற்பு

(காரைநகர்)

அரசியல் பணிகளை முன்னெடுப்பதற்காக நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினர் காரைநகருக்குச் சென்றனர்.

புலிகளின் அரசியல் பிரிவு பிரமுகர்கள் பிற்பகல் 2மணியளவில் வலந்தலைச் சந்தியை சென்றடைந்த போது அங்கு காத்துநின்ற மாணவர்கள், வர்த்தக சங்க உறுப்பினர்கள், மற்றும் பொதுமக்கள் அவர்களை ஆரத்தழுவி வரவேற்றனர்.

அத்துடன் தமது மகிழ்வை வெளிப்படுத்தும் வகையில் புலிகளின் பிரமுகர்களை தோளில் சுமந்தும் கூட்டிச் சென்றனர்.

மங்கள வாத்தியங்கள் இசைக்க மாணவர்கள் மலர்தூவ புலிகளின் பிரமுகர்களை யாழ்ற்றன் கல்லூரி மண்டபத்துக்கு பொதுமக்கள் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

(08ம் பக்கம் பார்க்க)

# மேற்கு கடற்பரப்பின் ஊடாக புலிகள் ஆயுதம் கடத்துகின்றனர்

## கடற்படைத் தளபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் மேற்குக் கடற்பரப்பினூடாகவே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இராணுவத் தளபாடங்கள் கடத்தப்பட்டு வருவதாக இலங்கைக் கடற்படை செய்தி வெளியிட்டுள்ளது.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி இரணைதீவில் அண்மையில் இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து இவ்வாயுதக் கடத்தல் இடம்பெற்றதாகக் கருத்து வெளியிட்டுள்ளார்.

கிழக்குக் கடற்கரைப்பிரதேசங்களின் ஊடாகவே தமிழீழ விடுதலைப்புலிகள் இதுவரை காலமும் ஆயுதங்களைக் கடத்தி வந்தனர் என முன்னர் சந்தேகம் நிலவி வந்தது என்றும் குறிப்பிட்ட கடற்படைத் தளபதி, நாட்டின் நீர்ப்பரப்பைப் பாதுகாக்கவும் அதில் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் உரிய அதிகாரத்தை கடற்படையினரே கொண்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் கடற்படையினருக்கு வழங்கப்பட்டிருக்கும் இவ் அதிகாரத்தில் எவ்வித மாற்றமும் கொண்டுவரப்படமாட்டாது. தொடர்ந்து இந்நடவடிக்கைகள் கடற்படையினரால் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-8)

# தமிழக மீனவர் 7பேர் இன்று விடுதலையாவர்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேமாதம் 29ம் திகதி கைது செய்யப்பட்டு யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்கள் 7பேர் இன்று விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் இருந்ததால் அவர்களை விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் பணித்ததையடுத்தே அவர்கள் இன்று விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இவர்களை இன்று பொறுப்பேற்று இலங்கையின் வடகடல் எல்லையில்

(08ம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் ஜயலத் இன்று யாழ் வருவார்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா, குருநாகல் மாவட்ட மேயர் நிமால் சந்திர ஸ்ரீ டி சில்வா ஆகியோர் இன்று யாழ்ப்பாணம்

(08ம் பக்கம் பார்க்க)

## மடவளவை படுகொலை

# அனுருத்த மீதான விசாரணை ட்ரயல் அட்பார் நீதிமன்றில்

(கொழும்பு)

கண்டி மடவளவை படுகொலை தொடர்பாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, அவரது இரு புதல்வர்களான லொஹான், சானுக்க ஆகியோர் மீதான வழக்கு விசாரணைகளை ட்ரயல் அட்பார் நீதிமன்றத்தில் நடத்துவதற்கான நடவடிக்கைகளை பிரதம நீதியரசர் எடுத்துள்ளார்.

இதற்கு முன்னோடியாக ''ட்ரயல் அட்பாார்'' நீதிமன்றத்துக்கான மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழுவை அடுத்த வாரம் நியமிப்பதற்கும் பிரதம நீதியரசர் சரத்.என்.சில்வா நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

கண்டி மடவளவை படுகொலை

(08ம் பக்கம் பார்க்க)

## வேலணை சேர்.வைத்தியலிங்கம் ம.ம.வி

# அதிபர், ஆசிரியர்களுடன் கடற்படைத் தளபதி சந்திப்பு

(ஊர்காவற்றுறை)

வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் வட பிராந்திய கடற்படைத்தளபதி சரத் வீரசேகராவைச் நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் வேலணை உதவி அரசாங்க அதிபர செ.இரத்தினமும் கலந்து கொண்டார்.

பாடசாலைக்கு முன்பாகவுள்ள பிரதான வீதி நேற்று முதல் பொது மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டதாக கடற்படைத்தளபதி இக் கலந்துரையாடலில் தெரிவித்துள்ளார்.

(இ-75)

## ...ு விளம்பரம்

### வாணி சோதிடம்

நீண்டகால அனுபவமிக்க சோதிடர். உங்கள் கல்வி தொழில் காதல், வெளியூர் பயணம், சிலவைத்தியத்தில் புலப்படா வினையநோய்கள் மனையில் குறைபாடுகள் தெரிந்துகொள்ளவும் நாடுங்கள். எம்மிடம் திருமணத்திற்கு சகல இன, மதத்திலும் உள்நாட்டு வெளிநாட்டுஆண் பெண் குறிப்புக்கள் உண்டு. நேரில்தொடர்புகொள்ளவும் பணியாற்றும்இடம் இல 14 யாழ்பாடிவீதி காலை9-00-மாலை2-00வரை பெருமாள் ஆலயமுன், முகவரி வாணி சோதிடர் சி கணேசன் 22/1 கச்சேரிவீதி நல்லூர்.

(5692)

### தவறிவிட்டது

339, 4-ம் யுனிற் திருநகர் மல்லாவியைச் சேர்ந்த வீரசிங்கம் தயாசீலன் என்பவரது மோட்டார் சைக்கிள் வாகன அனுமதிப் பத்திரம், காப்புறுதி, வரி அட்டை என்பன டயறி உடன்யாழ். பஸ்தரிப்பு நிலையத்திற்கு அண்மையில் தவறவிடப்பட்டுள்ளது. இதை கண்டெடுத்தவர்கள் ஐ. பொன்னுத்துரை' ஸ்ரேசன் றோட், கோண்டாவில் மேற்கு என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படுட.

(5593)


# மகளிர் முன்னேற்ற உத்தியோகத்தர்

# யாழ். செயலகத்தில் நேர்முக தேர்வு

## 262 பேருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மகளிர் விவகார அமைச்சினால் மகளிர் முன்னேற்ற உத்தியோகத்தர் ஆட்சேர்ப்புக்கான நேர்முகத் தேர்வு இம்மாதம் 26,27 ஆம் திகதிகளில் யாழ் செயலகத்தில் நடத்தப்படவுள்ளது.

மேற்படி நேர்முகத் தேர்வுக்கு 262 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரம் வருமாறு,

ஏனையோரின் பெயர் விபரங்கள் தொடர்ந்து வெளிவரும்.

பா.சுகுணா சுன்னாகம், ம.தங்கமலர் ஆனைக்கோட்டை, தி.வாசுகி யாழ்ப்பாணம், க.விமலாஜனி யாழ்ப்பாணம், ஆ.சிவரஜனி கொடிகாமம், செ.சுபாஜினி ஆனைக்கோட்டை, ம.சிவரூபா யாழ்ப்பாணம், பி. புனிதா சுழிபுரம், அ.நீலலோஜினி மண்டைதீவு, க.சிவச்செல்வி அச்சுவேலி, த.செந்தமிழ்ச்செல்வி, யாழ்ப்பாணம், சி.கிருஷாந்தினி இணுவில், ந.ரஞ்சனா யாழ்ப்பாணம், மா.பவாணி யாழ்ப்பாணம், ப.அனுஷா யாழ்ப்பாணம், ம.யசந்தா நீர்வேலி, ச.சசிகலா யாழ்ப்பாணம், சி.மீராதேவி அச்சுவேலி, த.முதினி உரும்பிராய், ந.தயாழினி கொக்குவில், செ.ரஜராணி நல்லூர், செ.சுஜந்தா மானிப்பாய், க.சத்தியபாமா தெல்லிப்பழை, சு.சயரூபி வசாவிளான், கு.சுஜித்தா கொக்குவில், க.வனஜா யாழ்ப்பாணம், இ.ரஜினி வட்டுக்கோட்டை, இ.தமிழரசி இணுவில், சி.சிறிவதனி கரவெட்டி, உ.ஜெயதாரணி கோண்டாவில், சி.சுதா நல்லூர், க. தர்சினி நல்லூர், சி தயாவாணி சுன்னாகம், தி.உமாதேவி பண்டத்தரிப்பு, பொ.பிரியதர்ஷினி நயினாதீவு. ச.நாகேஸ்வரி நயினாதீவு, அ.ரஜனி துன்னாலை, த.விஜிதா நல்லூர், பா.சுபானுதா ஆனைக்கோட்டை, சி.சிவாஜினி கொக்குவில், செ.அருந்ததி நீர்வேலி, தி.தாரணி இணுவில், நா. தயாளசுந்தரி நயினாதீவ, வி.சுபாசினி திருநெல்வேலி, ந.யசோதரா கோண்டாவில், ப.வசந்தி உரும்பிராய், ப. சியாமினி கொடிகாமம், செ.தேவஜீவரணி, ப.சுதாஜினி நாகர்கோவில், கு.பகீரதி பருத்தித்துறை, நா.சசிகலா கோப்பாய், கு சியாமளாதேவி பருத்தித்துறை, த.மஞ்சுளா அல்வாய் வடக்கு, மா.சுறாஜினி அளவெட்டி, ச. கௌசியா துன்னாலை, நா.மிதியா கைதடி, கி.ஜெனெற் மாட்டின் றோட், தே.கல்யாணி அளவெட்டி, ந.ஜெயவாணி கரவெட்டி வடக்கு, சி உஷாந்தினி கொழும்பு, வி யசோதா சங்கானை, செ.செல்வராஜினி உடுப்பிட்டி, செ.யுகந்தினி உடுப்பிட்டி இமையான், சி. கேசகுமாரி உடுப்பிட்டி, தி.சிவதர்ஷினி யாழ்ப்பாணம், கு.சுகந்தினி சாவகச்சேரி, எஸ்.லதா மங்களேஸ் திருகோணமலை, திருமதி எஸ்.பிறேமலதா மீசாலை, தி ரோகினி நவிண்டில், கே.யாழினி எழுதுமட்டுவாள். (உ-6)

## உலகத் தமிழ் மாநாட்டில் அமைச்சர் சந்திரசேகரன்

(கொழும்பு)

இம்மாதம் 20-ம், 21-ம் திகதிகளில் நடைபெறவுள்ள உலகத் தமிழ் பேரவையின் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக அமைச்சர் பெ. சந்திரசேகரன் நாளை சென்னை பயணமாகிறார்.

இம் மகாநாட்டின் அமைப்பாளர் பழ. நெடுமாறனின் அழைப்பை ஏற்றுச் செல்லும் அமைச்சர் சந்திரசேகரன் அம்மாநாட்டில் உரையாற்றவுள்ளார். (வ.

## இரு பெண்கள் கடத்தப்பட்டனர்

கொழும்பு கொச்சிக்கடை பகுதியில் இரண்டு இளம் பெண்கள் இனந்தெரியாதோரால் கடத்திச்செல்லப்பட்டுள்ளனர்.

ஆடைத் தொழில்சாலை ஒன்றில் வேலைசெய்யும் இவ்விரு இளம்பெண்களும் வேலைவிட்டு வீட்டுக்குத் திரும்பும்வழியில் வானில் வந்த இனந்தெரியாத ஆறு பேர்கொண்ட கோஷ்டி ஒன்று அவ் இளம்பெண்களை கடத்திச் சென்றதாகத்தெரிவிக்கப்படுகிறது

இவ்விருபெண்களும் கடத்தப்பட்டது தொடர்பாக கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயசுந்தரதலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது (வ,

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்ட லீக் போட்டிகள் இன்று யாழ் துரையப்பா விளையாட்டு அரங்கிலும், உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் போட்டியில் மாலை 4 மணிக்கு யாழ் பல்கலைக்கழகஅணியை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக்கழக அணியும் மாலை 5.15 மணிக்கு நடைபெறும் போட்டியில்பாடுமீன் அணியை எதிர்த்து சென் மைக்கல்ஸ்அணியும்மோதவுள்ளன.

இதேவேளை உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெறும் போட்டியில் சென் நீக்லஸ் அணியை எதிர்த்து றோயல் விளையாட்டுக்கழக அணியும், சென் அன்ரனிஸ் அணியை எதிர்த்து சென் றோக் அணியும் மோதவுள்ளன. (இ-5-110)

## ஏ. எல் பரீட்சை முடிவு ஆகஸ்ட் முதல்வாரத்தில்

(கொழும்பு)

கடந்தஏப்பிரல் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்தமாதம் முதல்வாரத்தில் வெளிவரவுளளது என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது

புதியகல்விச் சீர்திருத்தத்தின்படி நடைபெற்ற முதலாவது பரீட்சைகக்கு சுமார் 2லட்சத்து50ஆயிரம் மாணவர்கள் தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# தொழில்நுட்ப மாணவர் தெரிவு

# பரீட்சை முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

கொழும்பு பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு பிரிவால் 30. 06. 2002அன்று நடாத்தப்பட்ட தகவல் தொழில்நுட்பமாணி தெரிவுப் பரீட்சை முடிவுகள்வெளியாகியுள்ளன. யாழ். மாவட்டத்தில் IIS நிறுவனத்தினூடாக 102பேர் இத்தெரிவுப் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். இவர்களில் 72பேர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் விபரம் வருமாறு.

பூ கோகுலன், சி சுகந்தினி, ச. தேவமலர், க. ஜெகன், த சதீஸ்குமார், ப. ஆதீபன்,, .ஜெ.விக்னேஸ், ச.கௌசீதகி ப. டுஷ்ஷந்தி, ப.கலைமகள், க.பாலகணேசன், க. ஹரிஹரசக்தி, சி. பிரணவன், ந. பிருந்தா, பா. சுதர்சினி,

யோ.பிரபாகரன், இ. குமரன், சி.சாந்தகுமார், பா.தவனேசன், அ.நீரஜா, இ.கொட்வின், சி. சிவாஜினி, ம.றதீபன் கு.புரந்தரன், செ.றமேஸ், கோ. கோபிகிருஷ்ணன், லே. சதீஸ்குஷேந்திரன், ம. பிரசாந்தன், பா.கஜேந்திரன் பி.செ.ரீபிக்கா, ந ஜனுசியா, க. ஹிந்துஜா, த. மீரா, து.முகுந்தன், வி. இளமோகனன், சௌ. பிரபாகரன், த நிஷாகரன், சி.இலக்சணப்பிரியா, யோ. யசிந்திரா, சி. சிவகஜன், பொ. தியாகரூபன், ஆ.வாணி, செ; கலைச்செல்வி, ஆ. பிரேமினி, த.சாந்தலிங்கம், ம.துஷ்யந்தன், கணபதிப்பிள்ளை, ஞா.சுபாஸ்கர், ப.பத்மதீபன், வ. வேலினி, ச. சுஜீத்தா, ஶ்ரீ.பிருந்தா, கு. தர்சிகா, க. சண்முகநாதன், த. பவித்திரா, வி. வைதேகி, ச. சசிகலா, பரிபூரணாந்தசர்மா, ந.ஜெயக்காந்தன், கு. குகன், சொ. ஹரிகரன், சி. வினோதா, சி. மாலினி, செ.நளினி, பி.ஜெயக்குமார், ச. சிவலிங்கம், ம. மயூரதன், நா. சோதிரூபன், கு. மீரா, சி.கௌசலை, ம.மகாதேவா, அ. செல்ரன்.

பரீட்சைக்குத் தோற்றியோர்- 102, சித்தியடைந்தோர்- 72, பரீட்சைக்கு சமூகமளிக்காதோர்- 15, வெளிவராத முடிவுகள்- 02.

## டிரோன் முஷாரப் சந்திப்பு

(கொழும்பு)

பாகிஸ்தானின ஜனாதிபதி பர்வேஷ் முஷரப்பை இலங்கைவெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ கடந்த திங்களன்று அவரது மாளிகையில் சந்தித்து பேச்சு நடத்தியுளளார்

இச்சந்திப்பின் போது அமைச்சர் டிரோன்பெர்னாண்டோ நாட்டில் தற்போது பிரதமர் ரணில்விக்கிரம சிங்காவினாலும் தமிழீழ விடுதலைபபுலிகளின் தலைவர் வே.பிரபாகரனாலும் மேற்கொளளப்பட்டு வரும் சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து விளக்கிக் கூறியுள்ளதாக அமைச்சுவட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியா இலங்கை ஆகிய இருநாடுகளிடையேயும் கைச்சாத்திடப்படவுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்துப் அச்சமயம் ஆராயப்பட்டதுடன் இவ்விரு நாடுகளிடையே சீரான விமானசேவை ஒன்றினை நடத்துவது குறித்தும் ஆராயப்பட்டது.

இதேவேளை பாகிஸ்தானின் ஜனாதிபதி பெர்வேஷ் முஷரப் எதிர்வரும் 31ந்திகதி இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுளளமை குறிப்பிடத்தக்கது, (உ-8)

## மதுபானச்சாலை அமைப்பு பொதுமக்களின் சம்மதம் பெறப்படும்

(கொழும்பு)

புதிய மதுபானவிற்பனைச் சாலைகள் திறக்கப்படும் போது அம்மதுபான விற்பனைச்சாலை திறக்கப்படும் பகுதியில் உள்ளபொதுமக்களின் சம்மதம்கேட்கப்பட்ட பின்பே அவற்றைத் திறப்பதற்கான அனுமதி வழங்கப்படும் என நீதி அமைச்சர் லொக்குபண்டா தெரிவித்ரதுள்ளார்.

ஏற்கனவே பாடசாலைகளுக்கும் மத வழிபாட்டுத் தலங்களுக்கு அருகாமையில் திறக்கப்பட்டுள்ள மதுபான விற்பனைச்சாலைகள் தொடர்பாக பொதுமக்களின் அபிப்பிராயம் பெறப்பட்டு அவற்றைப் பூட்டுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும்நீதிஅமைச்சர் லொக்குபண்டார மேலும் தெரிவித்துள்ளார்: (வ)

## வவுனியா வளாக மாணவர் பகிஷ்கரிப்பு தொடர்கிறது

(வவுனியா)

மாணவர்களின் அடிப்படைத் தேவைகளை உள்ளடக்கிய 5அம்சக் கோரிக்கையை முன்வைத்து பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவரும் யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக பிரயோக விஞ்ஞானபீட மாணவர்களின் பகிஷ்கரிப்பு நேற்று மூன்றாவது நாளாக நடைபெற்றது.

பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள பிரயோக விஞ்ஞானபீட மாணவர்களுக்கு ஆதரவாக இன்று வவுனியா பஸ்நிலையம் முன்பாக அமைதியான ஆர்ப்பாட்டம் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை பொலிஸாரின் உதவியுடன் பல்கலைக்கழகவளாகத்தை திறப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டதாகவும், எனினும் பொலிஸார் அழைக்கப்பட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என மாணவர்கள் தெரிவித்ததை அடுத்து அந்த முயற்சி கைவிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

## வெங்காயப் பயிர்களில் குமிழ் அழுகல் நோய்

யாழ். குடாநாட்டில் தற்பொழுது வெங்காயப் பயிர்களில் குமிழ் அழுகல் நோயின் தாக்கம் பெரிதும் பரவி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

நோயுள்ள விதைக் குமிழ்களை நடுகைக்குப் பாவித்தல் பிரதான காரணியாக அவதானிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, தரையில் அதிக நீர் தேங்குதல், சிபார்சுக்கு அதிகமான நைதரசன் பசளை பாவித்தல், மற்றும் களை கட்டும் போது குமிழ்கள் தாக்கப்படல் போன்ற காரணங்களாலும் இந்தப் பங்கஸ் நோய் ஏற்படுகின்றது.

நோயினால் தாக்கப்பட்ட பயிரின் தாள்கள் மஞ்சள் நிறமடைந்து படிப்படியாக மேலிருந்து கிழாகக் கருகுவதுடன், தாக்கப்பட்ட குமிழ்களிலிருந்து துர்நாற்றமும் எழும்.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அழுகல் நோயற்ற குமிழ்களை நடுகைக்குப் பயன்படுத்தவும். அத்தோடு நடுவதற்கு முன்பு விதை குமிழ்களை ''போமசோல் போர்டி'' மருந்துக் கரைசலில் (150கிராம் மருந்து 10 லீற்றர் நீரில்) 15நிமிடங்கள் ஊறவைத்துப் பின்பு நிழலில் உலரவைத்து நடுகைக்குப் பயன்படுத்தலாம். பயிரில் நோயின் தாக்கம் காணப்பட்டால் மேல் குறிப்பிட்ட விகிதத்தில் போமசோல் போர்டி மருந்துக் கரைசலை தாக்கப்பட்ட பயிர்களுக்கும் அவற்றை சுற்றியுள்ள பயிர்களுக்கும் அடிப்பகுதிக்கு விசிறுமாறும் யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ச. சின்னத்துரை அறிவுரை வழங்கியுள்ளார். (19)

## இராசி பலன்

18-7-2002
(ஆடி 02, வியாழன்)
நவமி மு. இ.9. 38 வரை
சுவாதி மு. இ.10. 06 வரை
ராகுகாலம் 1.30-3.00
நல்ல நேரம் 10.30-12.00
அமிர்த சித்தம்

**மேடம்**
பிரயாண நன்மை, கலந்துரையாடல், போஷன சுசம், காரிய அனுகூலம்.

**இடபம்**
செய் தொழில் நன்மை, சந்தோஷமான சம்பவம், முயற்சி கைகூடும், சகோதரர் உதவி.

**மிதுனம்**
இனசனத் தொடர்பு, தேவையற்ற வார்த்தை, சொத்துக்களால் மனஸ்தாபம், காரிய தாமதம்.

**கடகம்**
உஷ்ண வியாதி. முயற்சி தாமதம், விருந்துபசாரம், வீண்பயம்.

**சிங்கம்**
களஸ்திர நன்மை, சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய ஜெயம், அந்நியர் சந்திப்பு.

**கன்னி**
தொழில் நன்மை, முயற்சி கைகூடும், வாக்கு கலகம், பெரியோர் ஆதரவு.

**துலாம்**
போஷன சுகம், நிலைமாற்றம், காரியம் கைகூடும், உறவினர் வருகை.

**விருச்சிகம்**
பித்தரோகம், உணர்ச்சி வசப்படல், முயற்சிதாமதம், நண்பர்கள் சந்திப்பு.

**தனுசு**
காரிய அனுகூலம், தனலாபம், அதிகாரிகள்வெறுப்பு, கீர்த்தி.

**மகரம்**
தொழில் முன்னேற்றம், குடும்ப மகிழ்ச்சி, உறவினர் வருகை, காரிய சித்தி.

**கும்பம்**
தந்தைவழி உறவு, மனச்சஞ்சலம், பிரயாணம், வயிற்றுக்கோளாறு.

**மீனம்**
பிரயாண பயம், எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், வேலைக்கஷ்டம்.
(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் ஏற்படும் சகல விளைவுகளுக்கும் ஜனாதிபதியே பொறுப்பு

## அம்பத்தலை கூட்டத்தில் அவரே தெரிவிப்பு

(கொழும்பு)
நாட்டில் இருதசாப்தங்களாக நடை பெற்றுவரும்யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் ஒரே நோக்கிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதானத்திற்காகவுமே தற்போது இடம் பெறும் ஏனைய அவசிய மற்ற நடவடிக்கைகளுக்கு இடம் கொடுக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அம்பத்தலை பகுதியில் நேற்றுமுன்தினம்இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் உரை நிகழ்ந்துகையில்;

சமாதான நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளை வெகுவிரைவாக சமாதான பேச்சுவார்த்தை மேசைக்கு அழைக்க வேண்டும்.

அவர்களால் விடுக்கப்படும் கோரிக்கைகளைபிரதமர் நிறைவேற்றிக்கொடுப்பதன் மூலம் சமாதானத்தை அடைந்து விட முடியாது. சமாதானத்தின் பொருட்டு விரைவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்

தற்போது கைச்சாத்திடப்பட்டிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால்ஏற்படும்சகலவிளைவுகளுக்கும் நாட்டின் தலைவி என்றவகையில்நானேபொறுப்பாகவுள்ளேன்.

நாட்டில் நிலைநிறுத்தப்படவிருக்கும் சமாதானம், எந்த வொரு இனத்தையும் அடிபணியாதவகையில் ஏற்படுத்தவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (உ-8)

# 20 வருட இனயுத்தத்திற்கு முடிவுகட்ட சமாதானப்பேச்சு ஒன்றே சிறந்த வழி

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண

(கொழும்பு)
20வருடகால யுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வருவதென்றால், அதற்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தவிர வேறு மார்க்கம் எதுவும் கிடையாதென புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் சமாதானம் சம்பந்தமான ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி அவர்களை வெகுவிரைவாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுத்த வேண்டும்.

தற்போது நமது நாட்டுக்கு அவசியமானவற்றில் சமாதானமே முதலிடமாக உள்ளது எனவும் அவர் அங்கு வலியுறுத்தியுள்ளார். (உ-8)

# வடமாகாண அதிபர் சங்கம் கல்விப்பணிப்பாளரை சந்தித்தது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்திற்கு அண்மையில்விஜயம்மேற்கொண்ட மாகாண கல்விப்பணிப்பாளர் ஐ. எம். இஸ்ஸதீனை வடமாகாண அதிபர் சங்கத்தினர் சந்தித்து உரையாடினர்.

இச்சந்திப்பின் போது அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்துஆராயப்பட்டதுடன்முக்கியதீர்மானங்கள் பலவும் எடுக்கப்பட்டன. அத்தீர்மானங்கள்வருமாறு.

- 1995 இலும் அதன் பின்பும் இடம் பெயர்வினாலும் வேறுகாரணங்களாலும் பாடசாலைக்கு ஏற்பட்ட இழப்புக்களை உரிய முறையில் பதிவளிக்க நடவடிக்கை எடுத்தல்.
- அதிபர்கள் வெற்றிடங்களை நிரப்பும் போது அதிபர் தரம் உள்ளவர்கள் விண்ணப்பித்தால் தர அடிப்படையில் நேர்முகப்பரீட்சை இல்லாமல் நியமனம் வழங்குதல்.
- பதில் உதவிக்கல்விப் பணிப்பாளர்களை நியமிக்கும் போது தர அடிப்படையில் அதிபர் தரம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளித்தல்.
- மாகாணமட்டபோட்டிகள் நடைபெறும்போது சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் நேர்மையாகவும் நீதியாகவும் உரிய நேரத்தில் நடைபெற ஆவன செய்தல்.
- மலசலகூட சுத்திகரிப்பாளர் அனுமதிக்கப்பட்ட ஆளணி இல்லாதபாடசாலைகளுக்கு அவர்களை நியமித்தல் ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மேற்படிசந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென பணிப்பாளர் உறுதியளித்ததாக வடமாகாண அதிபர்கள்சங்கச்செயலாளர்மு.செல்லையா தெரிவித்துள்ளார். (த)

## அதிமுக்கிய கலந்துரையாடல்கள்

(யாழ்ப்பாணம்)
கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சமுர்த்தி செயலணி உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நாளை பி.ப.3.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும்,

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சமுர்த்தி செயலணி உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் 23 ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 9.00 மணிக்கு பருத்தித்துறை இந்துக்கல்லூரியிலும் நடைபெறவுள்ளதாக வடமராட்சி அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

★ ★ ★

வடமராட்சிப் பிரதேச மினிபஸ் சங்கத்துடனான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு பருத்தித்துறை மினிபஸ் சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

★ ★ ★

யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட அனைத்துகிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கான அதிமுக்கிய சந்திப்பு நாளை வெள்ளிக்கிழமை பி. ப.3. 00 மணிக்கு யாழ். மத்தியகல்லூரி கேட்போர் கூடத்தில் இடம் பெற ஏற்பாடாகியுள்ளதால் சம்பந்தப்பட்டவர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் வலிகாமம் கிழக்கு அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (உ-3)

# உதைபந்து போட்டியில் பல்கலைக்கழக அணிவெற்றி

(சுண்டுக்குளி)
யாழ். உதை பந்தாட்டலீக்கின் அனுசரணையுடன் பொற்பதி விளையாட்டுக்கழகம் நடத்திவந்த அமரர் டாக்டர் ஏ. எஸ். சிவகுரு ஞாபகார்த்தஉதைப்பந்தாட்டஇறுதிப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் ஆரம்பமரனஇறுதிப் போட்டிக்கு கொடுக்கப்பட்ட நேரத்தில் யாழ். பல்கலை அணியோ அல்லது அதனை எதிர்த்து ஆடிய பாசையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகஅணியோ கோல்கள் எதனையும் போடவில்லை.

இதனைஅடுத்து வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்கு இரு அணிகளுக்கும் தலா 5 மேலதிக உதைகள்கொடுக்கப்பட்டபோது யாழ்.பல்கலைக்கழக அணி 3 கோல்களையும் சென் அன்ரனிஸ் அணி 2 கோல்களையும் பெற்றன. போட்டி நடுவர்களாக எஸ். சுரேந்திரன் கே. முத்துலிங்கம், சி.அரவிந்தன் ஆகியோர் கடமையாற்றினர் போட்டி முடிவில் பரிசளிப்பு வைபவம் இடம் பெற்றது.

உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ். கிளிபேட் அன்ரனிப்பிள்ளை பிரதமவிருந்தினராகவும், யாழ். உதை பந்தாட்டமத்தியஸ்தர் சங்கத் தலைவர் கப்ரின் டி. ஏ. எம். குணசிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (த-110)

## இ.செ. சங்க புதிய நிர்வாக சபை தெரிவு

(கொழும்பு)
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க புதிய யாப்பின் கீழ் இடம்பெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தலைவராக ஜெகத் அபேசிங்கவும், பிரதித் தலைவர் களாக சனத்திஸாநாயக்கா மற்றும் சுனில் திஸநாயக்கா ஆகியோரும் செயலாளராக நிமால் குமாரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (த)

## வெளிநாட்டு கல்விச் சுற்றுலா

(யாழ்ப்பாணம்)
தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஆசிரியப் பயிற்சிபெறும் 85 மாணவர்களுக்கு வெளிநாட்டு கல்விச் சுற்றுலா மேற்கொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

நாட்டிலுள்ள 17 கல்வியியற் கல்லூரிகளிலுமிருந்து தலா 5 மாணவர்கள் வீதம் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு இச் சுற்றுலாக் குழுவில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். (ஷ)

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)
சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10. 30 மணிக்கு துணைவியூர் சி .கேசவன் 'உதித்தனன் உலகம் உய்ய' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார்.

இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை சங்கரத்தையூர் சி.சபாநாதன் நிகழ்த்தவுள்ளார். (ஷ)

# தினக்குரல் செய்தியாளர் தாக்கப்பட்டார்

(கொழும்பு)
கொழும்புவிமானப் படைத் தலைமைஅலுவலகத்தில் செய்திசேகரிக்கச்சென்ற தினக்குரல் பத்திரிகையின் செய்தியாளர் விமானப்படை அதிகாரி ஒருவரால் தாக்கப்பட்டுள்ளார்.

புதிய விமானப்படைத்தளபதி எயார் மார்ஷல் ஜி.டி. பெரேரா பதவியை ஏற்றுக்கொள்வது தொடர்பாக நேற்று முன்தினம் காலை மேற்படி தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் செய்திகளைச் சேகரிக்கச் சென்ற தினக்குரல் செய்தியாளர் கே. பி. மோகன் என்பவரே தாக்கப்பட்டவராவார்.

தாக்கப்பட்ட செய்தியாளரை பொலிஸில் ஒப்படைக்கும் முயற்சிகளில் அவ் அதிகாரி முற்பட்டார்எனவும்,

மற்றுமோர் அதிகாரி இதில் தலையிட்டு சமாதானம் செய்துவைத்ததாகவும்தெரிய வருகிறது. (ஷ-8)

## 15இலட்சம் பெறுமதியான கஞ்சா கைப்பற்றப்பட்டது

(மாத்தறை)
தன்மன்வில பகுதியில் 18 கஞ்சா சேனைகளை சுற்றிவளைத்தபோது15இலட்சம் ரூபா பெறுமதியான கஞ்சாச் செடிகளை கலால் பகுதியினர் கைப்பற்றியுள்ளனர்.

கலால் பகுதி ஆணையாளர் டபிள்யூ.சோமசிறியின்பணிப்பின் கீழ் தனமன்வில அழுத்வெல, ஹம்பேகமுவ ஆகிய பகுதிகளில் இருந்தே இவை கைப்பற்றப்பட்டுள்ளன. (உ-3)

## ஆலயங்களுக்கு நந்திக் கொடி

(மானிப்பாய்)
இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு யாழ். மாவட்டத்திலுள்ள பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்களுக்கு இலங்கையில் பாடல் பெற்ற திருத்தலங்களின் திருமுறைப் பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்களையும் நந்திக் கொடியினையும் அந்தந்தப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள் மூலம் வழங்கியுள்ளது. (உ-120)

# இடதுசாரி இயக்கம் இலங்கையில் பலவீனம் அடைந்து வருகிறது

## வண. சமித்த தேரர் லண்டனில் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே செய்யப்பட்டுள்ள ஒப்பந்தம் சரியான திசையில் எடுக்கப்பட்ட ஒரு முடிவு என்று, காலிமாவட்ட எம் பியும் பௌத்த துறவியுமான வண. சமித்ததேரர் லண்டனில் நடைபெற்ற, கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

வெஸ்றிலி முத்தையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தேரர் மேலும் பேசுகையில்;

பொ ஐ மு. முன் வைத்த அரசியற் தீர்வுத் திட்டம் இரு தரப்பினருக்குமிடையில் நல்லெண்ணம் இல்லாததால் தோற்றுவிட்டது.

முன்னைய அரசாங்கங்கள் அரசியலை ஏய்ப்புவிளையாட்டாக கருதி நடந்ததால் நாடு அழிந்தது. இம் முறை தலைமைத்துறவிகள் பிரதமரின் சமாதானத் திட்டத்தை ஆதரித்து நிற்கின்றனர்.

புதிய அரசியற் கலாசாரம் ஒன்று உதயமாகுவது பற்றி புலிகளின் தலைவருக்கு நம்பிக்கை பிறந்துள்ளது. அதனால் அவர் அதிகாரப் பகிர்வை ஆதரித்து நிற்கிறார்.

இடதுசாரி இயக்கம் இலங்கையில் பலவீனமடைந்து வருகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இடது சாரிக் கட்சிகளை கலந்து ஆலோசிப்பதில்லை என்று சமித்த தேரர் மேலும் கூறினார். (இ)

## சுயதொழில் ஊக்குவிப்பு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சாவல்காடு, குருநகர், கொய்யாத்தோட்டம் பகுதி துணை இழந்த மாதர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் 'சுய தொழிலை ஊக்குவித்தல்' என்ற கருப்பொருளிலான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10.00 மணிக்கு சாவல்காடு பகுதியில் நடைபெறவுள்ளது.

சுயதொழில் ஊக்குவிப்பு மற்றும் தலைமைத்துவப் பயிற்சி உள்ளிட்ட இக்கருத்தரங்கிற்கு கியூடெக் நிறுவன அலுவலர் செல்வி ஜே. சுபோதினி தலைமை தாங்கவுள்ளார். (ஷ-6)

## சிறையில் இருந்து தப்பிச்சென்ற சிறுவன் கைது

(உடுவில்)

திருட்டுக் குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்து பின் தப்பிச் சென்ற கைதி ஒருவர் மீண்டும் பொலிஸாரால் பிடிக்கப்பட்டுள்ளார்.

அல்வாய்வடக்கைச்சேர்ந்த 16 வயதையுடைய சிறுவனே பொலிஸாரால் பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இவரை இரண்டு வருட நன்னடத்தைக்கு உட்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (உ-261)

## முக்கிய சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்க் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் மாணவ முதல்வர்களுக்கான முக்கிய சந்திப்பு நாளை வெள்ளிக்கிழமை மு. ப. 10. 00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி சந்திப்புக்கு தத்தமது பாடசாலை மாணவ முதல்வர்களை தவறாது அனுப்பி ஒத்துழைப்பு வழங்குமாறு விடுதலைப் புலிகளின் வலி-கிழக்கு அரசியல் துறையினர் அதிபர்களைக் கேட்டுள்ளனர். (உ)

## பாதீனியம் விரைவாகப் பரவுகிறது

(யாழ்ப்பாணம்)

கோப்பாய், புத்தூர், ஆவரங்கால், சிறுப்பிட்டி, நவக்கிரி, புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய், மருதனார் மடம், சங்கானை ஆகிய பகுதிகளில் பாதீனியக்களை விரைவாகப் பரவி வருவதை அவதானிக்க முடிகின்றது.

தோட்ட நிலங்கள், பொது இடங்கள், மக்கள் அதிகமாக புழங்கும் இடங்களிலேயே இவை பரவிவருகின்றன.

பொதுமக்கள், மற்றும் விவசாயிகளை இது விடயத்தில் விழிப்புடன் செயற்படுமாறு விவசாய உதவிப்பணிப்பாளர் ச.சின்னத்துரை அறிவித்துள்ளார். (உ-19)

## எரிகாயங்களுடன் இளம்பெண் அனுமதி

(யாழ்ப்பாணம்)

எண்ணெய் சிந்தி தீப்பற்றியதால் பலத்த எரிகாயங்களுக்குள்ளான நிலையில் இளம்பெண் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்;

நேற்று முன்தினம் கோண்டாவில் வடக்குப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சாந்தினி கெங்கநாதன் (வயது 32 ) என்பவரே எரிகாயங்களுக்குள்ளான நிலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (ஷ-6)

## அரச பாடசாலைகளை தரமுயர்த்த புதிய திட்டம் அடுத்த ஆண்டுமுதல் அமுல்

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகள் அடுத்தவருடம் முதல் புதிய திட்டம் ஒன்றின் கீழ் தரமுயர்த்தப்படவுள்ளன.

பாடசாலைகளின் பரீட்சைப் பெறுபேறுகள், வெளிவாரி நடவடிக்கைகளின் பெறுபேறுகள், ஆசிரியர்களின் முயற்சிகள், அதிபர்களின் நிர்வாகத்திறமை என்பனவற்றைக் கருத்திற்கொண்டே பாடசாலைகள் தரமுயர்த்தப்படவுள்ளன.

இதுவரை காலமும் நடைபெற்றுவந்த தரப்படுத்தலினால் வறிய பாடசாலைகள் பெருமளவு பாதிப்புக்கு உள்ளாகியுள்ளமையை கருத்திற்கொண்டே இப் புதிய நடமுறை அமுல்படுத்தப்படவுள்ளது. (உ-3)

## 'நிகோட்' அதிகாரிகள் இன்று யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

'நிகோட்' நிறுவனத்தின் வடக்கு-கிழக்கு திட்டப் பணிப்பாளர் ரி. லங்கா நேசன் தலைமையிலான உயர் அதிகாரிகள் குழு இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மேற்படி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்களைப் பார்வையிடும் இக்குழுவினர் மருதங்கேணிக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

அத்துடன், யாழ் செயலக அதிகாரிகளுடன் 'நிகோட்' நிறுவனத்தின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயவுள்ளனர். (ஷ-6)

## இராணுவ சிப்பாய்கள் கொலை வழக்கு விசாரணைகள் அநுராதபுரம்நீதிமன்றுக்கு

(உடுவில்)

இராணுவச் சிப்பாய்களைக் கொலை செய்த குற்றத்திற்காக யாழ். சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த இராணுவச் சிப்பாய்களின் வழக்குவிசாரணைகள் சாவகச்சேரிநீதிவான் நீதிமன்றத்தால் அநுராதபுர நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

கடந்த வருடம் தை மாதம் எழுதுமட்டுவாழ் பகுதியில் கைது செய்யப்பட்ட பி.ஜி விஜய குமாரதுங்க, ஜே எம். விஜயானந்த ஆகியோரும் அதே ஆண்டு மாசி மாதம் கிளாலிப் பகுதியில் நடந்த சம்பவ மொன்றில் கைது செய்யப்பட்ட ஆர். எம். சந்திர சேன ஆகிய கைதிகளின் விசாரணைகளே அநுராதபுர நீதி மன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இவர்கள் யாழ்ப்பாண சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் உதவியுடன் நேற்று முன் தினம் விமானம் மூலம் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (த-5,261)

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பௌசியை நீக்க கொழும்பு நீதிமன்றம் தடை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் எச்.எம். பௌஸியை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நீக்கிவிடும் நடவடிக்கைகளுக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்சிரேஷ்டதலைவர்களான ரட்ணசிறி விக்கிரம நாயக்க, மற்றும்டி,எம்ஜெயரத்னாஆகியோருக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் எம். எச். எம். பௌஸி தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்த பின்னரே நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை நேற்று முன்தினம் வழங்கியுள்ளது.

தேசிய அரசு ஒன்றை அமைப்பது தொடர்பாக பௌஸி தெரிவித்த கருத்துக்கள் கட்சியின் எந்தவொரு சட்டத்தையும் மீறவில்லை ஆயினும், தான் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக ஜனாதிபதி விளக்கம் கோரியபோது, அதற்குரிய பதில்கடிதம்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கட்சியின் மத்திய குழு மற்றும் நிறைவேற்றுக்குழு ஆகியவற்றின் ஏகமனதான தீர்மானங்களுக்கு அப்பால் தனது கட்சி அங்கத்துவத்தை இரத்துச் செய்யும் நடவடிக்கைகளையும் தடை செய்யுமாறு அம்மனுவின்மூலம்நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுளளதுடன்,

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்காவுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சட்டதிட்டங்களை மாற்றியமைக்கும் உரிமை இல்லைஎனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வழக்கு எதிர்வரும் 30 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(மானிப்பாய்)

நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தின் பொன்விழாவையொட்டியும் நிலையத்திற்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரு மாடிக்கட்டடத்தின் திறப்பு விழாவை முன்னிட்டும் நடாத்தப்பட்டு வரும் போட்டிகளில் ஓர் அங்கமாக யாழ். மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது.

இப்போட்டி நேற்றுத் தொடக்கம் 18,20,21 ஆம் திகதிகளில் முருகானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறஉள்ளது. (உ-120)

## நெடுந்தீவிலும் தியாகிதிலீபன் நினைவாக மருத்துவமனை அமையும்

(நெடுந்தீவு)

தியாகிதிலீபன் ஞாபகார்த்தமாக மருத்துவமனை ஒன்று நெடுந்தீவிலும் அமைக்கப்படவுள்ளதாகநெடுந்தீவு அரசியற் பணிமனைதிறப்பு விழாவில் உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

நெடுந்தீவில்சுகாதார வசதிகளை விருத்திசெய்யும் நோக்கோடு தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப்பிரிவினரால் அமைக்கப்படவுள்ள இம்மருத்துவ மனைக்கான இடத்தைத் தெரிவு செய்வதற்கு ஒரு குழு வருகை தந்துள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்தார். (ஷ-249)

## கிழக்கு மாகாண முஸ்லிம் இளைஞர்களுக்கு இராணுவப்பயிற்சி அமைச்சர் ஹக்கீம் மறுதலிப்பு

(கொழும்பு)

கிழக்கு முஸ்லிம் இளைஞர்களுக்கு அரசாங்கம் இராணுவப்பயிறசி வழங்க வேண்டும் என்று தான் ஒருபோதும் கூறியிருக்கவில்லை என்று ரவூப்ஹக்கீம தெரிவித்துள்ளார்,

பேரியல் அஷ்ரப் இது பற்றி தெரிவித்த கருத்துக்களைகண்டிப்புடன் மறுத்துக் கூறிய அவர், ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் ஆயுதங்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது எனவும் இதனை மேலும் மோசமடைய விடக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்ரகிஸ் எக்கட்டத்திலும் இதனை ஆதரிக்காது இது நீடித்துநின்று தொல்லைதரும்தாக்கங்களை உண்டு பண்ணக் கூடியது.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் தாம் ஆயுதம் ஏந்த வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அவர்கள் இதன் மூலம் சமாதானத்தை குழப்பும் செயல்களில் ஈடுபடலாகாது என்றும் மேலும் குறிப்பிட்டார். (இ)

## பிரதிப்பொலிஸ் பரிசோதகர்களுக்கு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நியமனம்

பொலிஸ் திணைக்களத்தில் சர்ச்சையை உருவாக்கிய 30 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களின் பதவி உயர்வுகள் இரத்துச் செய்யப்பட்டு'32 பிரதிப் பொலிஸ் பரிசோதகர்களுக்கு புதிதாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொலிஸ் திணைக்களத்தில் இடம்பெற்றஉதவிப்பொலிஸ் அத்தியட்சகர்களுக்கான நேர்முகப் பரீட்சையின் போது பல்வேறு மோசடிகள் இடம்பெற்றதாக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதையடுத்தே தற்போது இப் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. (உ-3)

# இன்று ஒரு தகவல்

## அன்பும் அறிவும் அவசியம்

ஒரு அம்மாவுக்கு அவரின் வீட்டுக்காரர் மேலே அளவு கடந்த அன்பு. அந்த அன்பை அவர் காட்டுகிற விதம் எப்படித் தெரியுமா? கோப்பி போடும்போது, சர்க்கரையைக் கை நிறைய அள்ளி அதிலே கொட்டிக் கொடுப்பார். அந்த அப்பாவி மனிதனும் அதை மிகவும் விருப்பமாகச் சாப்பிடுவார். வெளியிலும் அதைப் பெருமையாகச் சொல்லிக்கொள்வார். 'என் மனைவிக்கு வரவர என் மேலே அன்பு அதிகமாகிக் கொண்டே வருகிறது' என்பார். எப்படிச் சொல்கிறீர்கள்? என்று கேட்டால்,

'முன்னரெல்லாம் இரண்டு கைப்பிடி சர்க்கரை கோப்பியில் போடுவார். இப்போது மூன்று கைப்பிடி அளவுக்குப் போடுகிறார். அப்படியென்றால் அன்பு வரவர அதிகமாகிக் கொண்டு வருகிறது என்றுதானே அர்த்தம்' என்பார். அந்த அம்மாவிடம் அன்பு அதிகமாக இருப்பது உண்மையோ, இல்லையோ இவரிடம் அறிவு குறைவு என்பது உண்மை. அதில் சந்தேகமே வேண்டியதில்லை. அன்பு மட்டும் ஒருவரிடம் இருந்தாலும் பிரயோசனம் இல்லை, அறிவு மட்டும் ஒருவரிடம் இருந்தாலும் பிரயோசனம் இல்லை. மகிழ்ச்சியான வாழ்வுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படுவது இரண்டு. ஒன்று அன்பு, இன்னொன்று அறிவு. இந்த இரண்டில் ஒன்று இல்லையென்றால் கூட மகிழ்ச்சி போய்விடும் என்கிறார் தத்துவ மேதை பேட்ரண்ட்ரஸ்ஸல்.

அதை விளக்குவதற்கு அவர் மிகப் பெரிய உதாரணங்களைக் கொடுக்கிறார். இரண்டாவது உலக யுத்தம் நடந்ததல்லவா? அந்தச் சமயத்தில் பல நாடுகளில் ஏராளமான இராணுவ தளபாடங்களையெல்லாம் தயார் பண்ணினார்கள். வெடிமருந்து தொழிற்சாலைகளை உருவாக்கினார்கள். நவீன போர்க் கருவிகளைத் தயார் பண்ணினார்கள். இதற்கெல்லாம் அறிவுதான் காரணம். அவர்களிடம்இருந்த தொழில் நுட்ப அறிவுதான் இவ்வளவும் தயாராவதற்குக் காரணம். இருந்தும் இவை எதற்கு உபயோகப்பட்டது? உலகத்திற்குக் கெடுதல் பண்ணுவதற்குத் தான் உபயோகப்பட்டது.

யுத்தத்தை ஆரம்பித்த ஜேர்மனியர்களும் சரி, மற்ற நாட்டுக்காரர்களும்சரி தாங்க முடியாத கஷ்டங்களை அனுபவித்தார்கள். இதற்கு அன்பு என்பது இல்லாமல் போனது தான் காரணம். அறிவு ஆயுதங்களைத் தயாரித்தது.

அன்பு இல்லாததனால் அது அவர்களுக்கே இடைஞ்சலாகப் போய்விட்டது. அன்பு சேராத வெறும் அறிவுமட்டும் மகிழ்ச்சியைக் கொடுக்க முடியவில்லையே. அதே மாதிரித்தான் அறிவு சேராத அன்பினாலும் மகிழ்ச்சியைக் கொடுக்க முடியாது. அறிவு சேராத அன்பும் ஆபத்தை உண்டாக்கி விடும்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவிலும், பக்கத்து நாடுகளிலும் ஒரு பயங்காரமான நோய் பரவியது. 'பிளேக்' என்னும் தொற்று நோய் தான் அது. அது அதிகமாகப் பரவியதற்குக்காரணம் என்ன என்று நினைக்கிறீர்கள்? அன்புதான் அதற்குக்காரணமாம். எப்படித் தெரியுமா? அன்பு காரணமாக உறவினர்களும் நண்பர்களும் நோயாளிகளைக் கட்டித் தழுவித் தங்களுடைய அன்பைத் தெரிவித்துக் கொண்டார்களாம். இது நோய் வேகமாகப் பரவுவதற்குச் சாதகமாகப் போய் விட்டது. அறிவு சேராத அன்பினால் இந்த நிலைமை. ஆகவே நாம்தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் அறிவு இல்லாத அன்பும் ஆபத்து. அன்பு இல்லாத அறிவும் ஆபத்து என்பதாம். நாம் சந்தோஷமாகஇருக்கவேண்டுமென்றால் இந்த இரண்டும் கலந்து இருக்க வேண்டியது அவசியம்.

ஒருகுடும்பத்தில்மனைவிக்கு உடம்பு சரியில்லை, காலையில் கணவன் எழுந்து கோப்பி போட்டார். கோப்பி போடுவது இதுதான்அவருக்குமுதல் அனுபவம். எதெதையோ எடுத்து ஒன்றாகக் கலந்தார். கோப்பி மாதிரி ஒரு திரவத்தைத் தயார் பண்ணினார் மிகவும் பவ்வியமாக மனைவியிடம் கொண்டு போய்க் கொடுத்துச் சாப்பிடச்சொன்னார். மனைவி நீங்கள் சாப்பிடுங்கள் என்றார். 'எனக்கு வேண்டாம் நீ சாப்பிடு' என்றார், இவர் அந்த அளவுக்கு என்மேல் அன்பு வைத்திருக்கிறீர்களே என்றார். அவர் நிமிர்ந்து அந்த அம்மாவைப் பார்த்தார். என்னிடம் அன்பு இருக்கிறது அதனால் தான் உன்னைச் சாப்பிடச் சொன்னேன். அதேநேரத்தில்எனக்கு அறிவும் இருகிறது அதனாற்றான் நான் சாப்பிட மாட்டேன் என்கிறேன். ஏனென்றால் நான் தயார் பண்ணிய கோப்பி அப்படியானதுஎன்று விளக்கம் கொடுத்தார் அந்த ஆள்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஒசுசல கிளை ஒன்று யாழில் திறக்க ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின்மருந்துவிற்பனை நிலையமான 'ஒசுசல' வின் கிளைகள் திறக்கப்படவுள்ளன.

இது பற்றி தெரிவித்த அரச மருந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் சுனீத்திராரணசிங்க முதலில் யாழ்ப்பாணத்தில் ஒன்றும், திருகோணமலையில் ஒன்றும் திறக்கப்படவுள்ளது என்றும்,

இதுபற்றி எம். பிக்களுக்கு எழுதியுள்ளதாகவும் அவர்கள் ஏற்ற வசதிகளைசெய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்மூலம்தரமான மருந்துகளை குறைந்த விலையில் மக்கள்பெற்றுக் கொள்ளவாய்ப்பு ஏற்படும் எனவும்மேலும்அவர் தெரிவித்தார். (உ)

# 'செற்றிக்' குழு வருகை

(யாழ்ப்பாணம்)

இன்றைய யாழ்ப்பாண நிலைமை தொடர்பாகநேரில் ஆராய்வதற்காக கண்டி செற்றிக் நிறுவனத்தைச் சேர்ந்த 40 பேர் அடங்கிய குழு ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை 22 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது.

கியுடெக் நிறுவனத்தினரின் ஏற்பாட்டில்இவர்கள் வருகை தருவது குறிப்பிடத்தக்கது. (உ-6)

# நிரந்தர சமாதானத்திற்கான பல்கலைக்கழக கல்விமான்களின் ஒத்துழைப்பு மாநாடு 28 இல்

(கொழும்பு)

யுத்தத்தை நிராகரித்து நிரந்தர சமாதானத்திற்கான பல்கலைக்கழக கல்விமான்களின் ஒத்துழைப்பு மாநாடு எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு இலங்கைமன்றக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டை, கட்சிசார்பற்ற முறையில்நட்பு ரீதியாக கருத்துக்களை பரிமாறிக் கொள்ள ஜனநாயகத்திற்கும் அபிவிருத்திக்குமான மையம், ஜனநாயக உரிமைகளைக் காப்பதற்கான இயக்கம், சமாதானத்துக்கும் ஒருங்கிணைப்பிற்குமான முன்னணி, மனித உரிமைகள் கற்கைக்கான நிலையம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

பல்கலைக்கழகங்களோடு இணைந்த நிறுவனங்களுக்கும் பல்கலைக்கழக மட்டங்களிலான ஏனைய கல்வி நிறுவனங்கள் உட்பட இலங்கையில் அமைந்துள்ள 13 பல்கலைக்கழகங்களுக்கும் இவ் ஒத்துழைப்பு மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சமாதானத்தையும், ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும் நிலை நாட்டுவதோடு நிரந்தர சமாதானத்திற்கான அர்ப்பணிப்பையும் திடசங்கற்பத்தையும் இம் மாநாட்டில்பிரகடனப்படுத்தவுள்ளதாக தெரியவருகிறது. (உ-3)

# சுயதொழில் முயற்சி வழிகாட்டல்

(யாழ்ப்பாணம்)

தீவகம், வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, யாழ்ப்பாணம் ஆகிய இளைஞர் குழுக்களுக்கான இளைஞர் உருவாக்கற் பயிற்சியும், சுயதொழில் முயற்சி வழிகாட்டலும் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் கியூடெக் நிறுவன ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27,28,29 ஆம் திகதிகளில் முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை நடைபெறவுள்ள இப் பயிற்சியிலும் வழிகாட்டலிலும் கியூடெக் ஊக்குவிப்பாளர்கள் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவர். (ஷ-6)

# மாதாந்த உதவிப்பணம்

(மானிப்பாய்)

வலி தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களினதும் மற்றும் காசநோய், தொழுநோய், புற்றுநோய் என்பவற்றிற்கான உதவிப்பணம் பெறுபவர்களினதும் யூலை மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்மந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (உ-120)

# நெஞ்சுறுத்தும் கானல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்களை மிதிவெடிகள் மற்றும் வெடிபொருட்களில் இருந்து பாதுகாக்கும்நோக்குடன்யுனிசெவ் நிறுவனமும் அகதிகள் புனர்வாழ்வுநிறுவனமும்இணைந்து செயற்படுத்திவரும் நாடக ஆற்றுகையான 'நெஞ்சுறுத்தும் கானல்' இன்றுகரம்பைக் குறிச்சி அ.த.க பாடசாலையில் நடைபெறவுள்ளது. (உ-3)

# கூடைப் பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்திவரும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று பி.ப4.30 மணிக்கு ஜொலிஸ்ரார் வி.க. எதிர் பட்டர் விளை வி.க,

பி.ப 5.15 மணிக்கு யுத்காமல் வி.க. எதிர் அரியாலை ஐக்கிய வி.க ஆகியன பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் மோதவுள்ளன. (உ-3)

# குண்டுவீச்சுக்கு இலக்கான கட்டடம் பொறிந்ததில் நால்வர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

குண்டு வீச்சுக்கு இலக்கான கட்டடத்தைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த வேளை, அது பொறிந்து வீழ்ந்ததில் அங்குபணியில் ஈடுபட்டிருந்த நால்வர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி சந்தைப்பகுதி வர்த்தக நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கோப்பாய் மத்தியைச் சேர்ந்தவர்களான ச. கமலநாதன் (வயது31) செ. தேவச்சந்திரன் (வயது19) மற்றும்சி. கிருபாகரன் (வயது19) கு. குணேஸ்வரன் (வயது22) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்கள் கூரையில் ஏறி ஓடு கழற்றிக் கொண்டிருந்த வேளையிலேயே இந்தஅனர்த்தம் நிகழ்ந்ததாகதெரியவந்துள்ளது. (உ-6)

# கியூடெக் ஏற்பாட்டில் இளைஞர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி

(யாழ்ப்பாணம்)

'கியூடெக்' நிறுவன ஊக்குவிப்பாளர்களினால் எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சாவல்காட்டுப் பகுதியில்இளைஞர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை ஒன்று நடத்தப்படவுள்ளது.

அன்றையதினம்மு.ப.10.00 மணிக்கு ஆரம்பமாகும் இப் பட்டறையில் சுன்னாகம், மானிப்பாய், சாவல் காடு பகுதிகளைச் சேர்ந்த இளைஞர் குழுக்கள்கலந்து கொள்ளவுள்ளனர்.

இளைஞர்களிடையே நல்லதோர் தலைமைத்துவத்தை ஏற்படுத்தி அவர்களைப் பொறுப்புவாய்ந்த பிரஜைகளாக உருவாக்குவதே இப் பட்டறையின் நோக்கம்என்று கியூடெக் நிறுவன வட்டாரங்கள தெரிவித்தன. (ஷ-6)

# முகாமைத்துவ உதவியாளர் பயிற்சிப் பட்டறை 3 தினங்கள் திருமலையில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு தொழிற்றுறைத் திணைக்களத்தில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்று திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரையான மூன்று தினங்கள் முழுநேரமாக நடைபெறவுள்ள இப்பட்டறை வடக்கு-கிழக்கு தொழிற்றுறை திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இப்பட்டறைக்கு மேற்படி திணைக்களப் பணிப்பாளர் ம. ஏரேனியஸ் தலைமை தாங்கவுள்ளார். (ஷ-6)

# பேச்சு விபரங்களை உடனுக்குடன் அறிய தாய்லாந்து தலை நகரில் வள ஆய்வு மையம்

(கொழும்பு)

தாய்லாந்தில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் தொடர்பான விடயங்கள் கருத்துப்பரிமாறல்களை உடனுக்குடன் சர்வதேசமட்டத்திற்குவழங்குவதற்கு ஏற்ற வகையிலான வள ஆய்வு நிலையம் ஒன்றை தாய்லாந்தின் தலை நகரில் அமைக்கஏசியாபவுண்டேசன் முடிவு செய்துள்ளது.

இப் பேச்சுவார்த்தையின் போது பங்குபற்றும் தரப்பினரிடையே இடம் பெறவுள்ள கருத்துப்பரிமாறல்கள், இணக்கப்பாடுகள் தீர்வுகள் குறித்த விடயங்களை உடனுக்குடன் அறிந்து கொள்வதில் உள்நாட்டவர்களும் ஆர்வமாக இருப்பதை கருத்தில்கொண்டு இந் நிலையத்தை அமைக்க முடிவு செய்துள்ளது. (உ-3)

# சித்திரப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டக் கல்வி அலுவலகத்திற் குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான சித்திரப் போட்டியும், கண்காட்சியும் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-19

### 30 வருடங்கள் மக்களை துன்புறுத்தியமைக்காக

# வட அயர்லாந்து ஐ. ஆர். ஏ. இயக்கம் முதல் தடவையாக மன்னிப்பு கோரியது

(டப்ளின்)
கடந்த 30 வருடங்களாக பொதுமக்கள் மீது மேற்கொண்டபயங்கரவாத நடவடிக்கைகளுக்காக வட அயர்லாந்தின் ஐ.ஆர்,ஏ இயக்கம் முதல்தடவையாக பொது மக்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளது.

கடந்த காலங்களில் தமது இயக்கம் பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூட்டுக்களை நடத்தியதாகவும், மக்களுக்கு பெரும்கொடுமைகளைஇழைத்ததாகவும் அவ் இயக்கம் ஒத்துக் கொண்டுள்ளது

இந்த இயக்கத்தின்பகிரங்க மன்னிப்பானது காலம்பிந்திய ஒன்றென வட அயர்லாந்து மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

வடஅயர்லாந்தின்சமாதான மார்க்கத்தில் இது ஒரு பெரும் திருப்பம் என பிரிட்டன் அரசாங்கம் இதனைவரவேற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## விண்ணப்பிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ் மாநகராட்சிமன்றத்தில் கடமையாற்றும் நிரந்த சிற்றூழியர்களில் இருந்து வேலைமேற்பார்வை யாளர் காவலாளி அலுவலக உதவியாளர் போன்றஊழியர் உள்ளகபதவி உயர்வு வழங்கப்படவுள்ளது.

இவ் உள்ளகப்பணியில் இணையவிரும்புவோர் மாநகராட்சி மன்றத்தில் அதற்கான விண்ணப்பப்படிவங்களைப்பெற்று பூரணப்படுத்தி அதற்குப் பொறுப்பான அதிகாரியிடம் கையளிக்குமாறு மாநகர முதல்வர் செ.கந்தையன் கேட்டுள்ளார். (இ·5)

# அணு விஞ்ஞானி அப்துல்கலாமை கொல்ல தீவிரவாதிகள் திட்டம்

(புதுடில்லி)
இந்தியாவின் குடியரசுத் தேர்தலில் போட்டியிட்டு முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அணுவிஞ்ஞானி அப்துல்கலாமை கொலைசெய்வதற்கு திட்டம் தீட்டப் பட்டிருப்பதாக இந்திய உளவுப்பிரிவு அதிர்ச்சித்தகவல் வெளியிட்டுள்ளது.

ஜம்முகஷ்மீரை தளமாக கொண்டு இயங்கும் லக்சறிஇதொய்பா அமைப்பு மட்டுமன்றி பாகிஸ்தானில்இருந்து செயற்பட்டுவரும் ஹிஸ்புல் முஜாகிதீன் குழுவினரும் அவரைகொலை செய்வதற்கு திட்டம் தீட்டிஇருப்பதாக அந்ததகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இந்ததகவல்கள் வெளியானதை அடுத்து அப்துல்கலாம் தங்கியிருக்கும் பகுதிகள் அவரதுவாசஸ்தலம் செல்லும் இடங்கள் என்பவற்றில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தியுள்ளதாக இந்தியாவின் விசேடபொலிஸ் ஆணையாளர் எஸ்.கே.கஜன் தெரிவித்துள்ளார்.

இந்திய குடியரசுத்தேர்தல் கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்டபோதிலும் வாக்கு எண்ணும்பணிகள் இன்று தொடக்கம் ஆரம்பிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## பசு மாட்டுடன் பஸ் மோதியதில் 18 பேர் பலி

அண்மையில் தென் ஆபிரிக்காவின் கேப் நகரப்பகுதியில் பஸ்வண்டியொன்று பசு மாட்டுடன் மோதியதில் ஐந்து குழந்தைகள் உட்பட 18பேர் பலியாகியுள்ளனர்.

20பேர்உயிர்தப்பியுள்ளனர் மரணச்சடங்கு ஒன்றில் பங்குபற்றிய பின்னர் வீடு திரும்பும்போதே இவ்விபத்து நடந்துள்ளது.

சாலை விபத்துக்கள்அதிகம் நடக்கும் நாடுகளில் தென்னாபிரிக்காவும் ஒன்று என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-3)

### பிரான்ஸ் அதிபரை

## கொலைசெய்ய முயன்றவர் 'நாஜி' உறுப்பினராம்

(பரிஸ்)
பிரான்ஸ் அதிபர் யக்குயிஸ் சிராக்கை கொலை செய்ய திட்டமிட்டநபர் நாஜி அமைப்பைச்சேர்ந்தவர் எனபாதுகாப்புப்பிரிவினரின் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பிரான்ஸ் அதிபர்மாளிகை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸ் புரட்சியினை நினைவு கூரும் முகமாக நடத்தப்பட்ட விழாவில் அதிபர்கலந்து கொண்டபோதே மெக்ஸின்புருணறி என்றமேற்படி அமைப்பைச் சேர்ந்தமாணவன் கொலை செய்ய முயற்சித்தமை தெரிந்ததே.

இவரதுமனநிலை பாதிக்கப்பட்டது போல தென்படுவதனால் இம்மாணவனை மனநோயாளர் சிகிச்சை வைத்தியசாலையில் சேர்த்து பலத்த பாதுகாப்பின் மத்தியின் சிகிச்சை அளித்துவருவதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (உ-8)

## பதவி நிலைப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)
கைதடி செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை அதிபர் தம்பிராசா சாம்சன் லூர்திஸ் நாளை முற்பகல் 10. 30 மணிக்கு யாழ். பரியோவான் ஆலயத்தில் கொழும்பு ஆயர் அதிவண டியூலிப் டிசிக்கேராவினால் பதவி நிலைப்படுத்தப்படவுள்ளார். (ஷ)

## மின்சார விநியோகம்

(கொடிகாமம்)
அளவெட்டிப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான பூர்வாங்க வேலைகளை மின்சார சபையினர் மேற்கொண்டு வருகின்றனர். (உ-256)

### காக்கைதீவு கடலில்

## இறால் அபகரிப்பு மீனவர் அதிருப்தி

(மானிப்பாய்)
காக்கைதீவுகடலில் மீனவர்களின் இறால் கூட்டிலிருந்து திருடர்களால் இறால்கள அபகரித்துச் செல்லப்படுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இக்கடலில் தொழில் செய்யும் மீனவர்கள்அதிகாலையில் செல்லுமுன்பே அங்கு செல்லும் விஷமிகள் சிலர் இறால்களைகளவடிச் செல்வதுடன் வலைகளைவீசிவிட்டுச் செல்வதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

இதனால், கடற்றொழிலையே தமது சீவனோபாயமாக நம்பியுள்ள மீனவக் குடும்பங்கள் பட்டினியின் விழிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகிறது. (ஷ-120)

## பங்குகள் விற்பனை

(கொழும்பு)
இலங்கை மத்திய வங்கி நாளை திறைசேரி பங்குகளை விற்பனை செய்யவுள்ளது. மொத்தமாக 5 ஆயிரத்து399 மில்லியன் ரூபாபெறுமதியான பங்குகள ஏலத்தில் விடப்படவுள்ளன. (உ-3)

## நீர்கொழும்பைச் சேர்ந்த சமூகசேவை யாளர்கள் 35பேர் யாழ் வருவர்

(யாழ்ப்பாணம்)
சமாதான முன்னேடுப்புக்கள் யாழ்குடாநாட்டு மக்கள்மத்தியில் எத்தகையமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன என்பது தொடர்பாக ஆராயும்வகையில் நீர்கொழும்பு சமூகசேவைகள் அமைப்பின் இணையத்தைச்சேர்ந்த 35 பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்

எதிர்வரும் 20ந்திகதி சனிக்கிழமை இன்நோக்கமாக வரும்இவர்கள் குடாநாட்டில் உள்ளசமூகசேவை அமைப்புக்கள் மற்றும்யுத்தத்தினால் நேரடியாகபாதிப்புற்ற மக்கள் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர். (உ,6)

### மக்களை நாடிச் சென்று

## ஜயஸ்ரீ பரிசுத் திட்டத்தில் சேர்க்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
மக்களை நாடிச் சென்று ஜயஸ்ரீ பரிசுத்திட்டத்தில் அவர்களை இணைக்கும் நடவடிககையில் மக்கள் வங்கி இம் மாதம் 22 ம் திகதி திங்கட்கிழமை முதல் ஈடுபடவுள்ளது.

இந்த வகையில் ஜயஸ்ரீ பரிசுத் திட்ட விளம்பர வாகனமானது 22 ஆம திகதி சாவகச்சேரியிலும், 23 ஆம் திகதி வழிபாட்டுத் தலங்களிலும், 24 ஆம் திகதி நெல்லியடி, வல்வெட்டித்துறை, அச்சுவேலி, சுன்னாகம் பகுதிகளிலும், 25 ஆம் திகதி ஸ்ரான்லி வீதி, கன்னாதிட்டியிலும், 26 ம் திகதி மானிப்பாய் சங்கானைஉரும்பிராய் பகுதிகளிலும் இப் பணியை மேற்கொள்ளவுள்ளது. (உ-2)

### மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி

# தென்மராட்சி தெற்கு மக்கள் புனர்வாழ்வு அமைச்சருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)
தென்மராட்சி தெற்கைச் சேர்ந்த கிராமங்களானதனங்கிளப்பு, மறவன்புலம்,கோவிலாக் கண்டி, கைதடி, நாவற்குழி மக்கள் தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி யாழ். அரச அதிபர் ஊடாக புனர்வாழ்வு, மீள்குடியமர்வு மற்றும் அகதிகள் அமைச்சர் கலாநிதி ஜயலத் ஜெயவர்த்தனாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அக்கடிதத்தின் விபரம் வருமாறு:

தனங்கிளப்பு,மறவன்புலவு, கோவிலாக் கண்டி, கைதடி, நாவற்குழி கிராமங்களைச் சேர்ந்த மக்களாகிய நாம் உங்கள் கவனத்துக்காகவும் உரிய நிவாரணத்துக்காகவும் கீழ்க் கண்ட விபரங்களைச் சமர்க்கின்றோம்.

எங்கள் கிராமங்கள்சாவகச்சேரி தேர்தல் தொகுதியின் தென்பகுதியாகும். இக்கிராமங்களின் தெற்குபக்கம்பூநகரி ஏரியாகும் இக்கிராமங்கள் நெல்வயல்களும் தென்னை பனைகளும் நிறைந்த கிராமங்களாகும்.

8 ஆயிரம் பேர் கொண்ட இக்கிராமங்களில் பத்து வீதமானோர் மாணவர்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில், செய்கிறார்கள் ஏனையோர் விவசாயத்திலும் மீன்பிடித்தலிலும் மற்றும் தென்னை பனைகளிலிருந்து கிடைக்கும் வருமானத்திலும் தங்கியிருக்கிறார்கள்.

1999 இல் யுத்த நிலைகாரணமாக அனைத்து மக்களும் இடம் பெயர்ந்து பல்வேறு இடங்களுக்கும் சென்றார்கள். இவர்கள் தங்களது வீடுகளிலிருந்து எதுவித பொருட்களையும் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

தற்போது தென்மராட்சியின் ஏனைய பகுதிமக்களும் பளை மக்களும் தங்களதுவீடுகளில் மீளக் குடியமர்கிறார்கள். ஆனால் எங்கள் பகுதி மக்கள் பாதுகாப்புப் படையினரால் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை.

இப்பகுதியில் விளைகின்ற நெல் யாழ்ப்பாண மாவட்டத்தின் அரைவருடத் தேவைக்குப்போதுமானதாகும். இங்கு கிடைக்கின்றதேங்காய்மாவட்டத்தின் தேவையின் பெரும் பகுதிக்குப் போதுமானதாகும்.

1999 டிசெம்பரிலிருந்து மக்கள் அங்கு செல்ல அனுமதிக்கப்பட வில்லை. 1999 ஆம் ஆண்டில் தங்கள் அறுவடையை அவர்கள் செய்ப வில்லை;

2000, 2001 ஆம் ஆண்டுகளில் உற்பத்திஇல்லைஇந்தப் போரினால் மக்கள் தங்களது வருமானத்தை இழந்துள்ளனர். அவர்கள் அகதிகளாக சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மக்களது அவலமான நிலையை கவனத்தில் எடுத்து அவர்கள் மீளக்குடியமர ஒழுங்குகளைச் செய்யுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறோம் என்றுள்ளது. (ஷ)

### றப்பர்த் தொழிற்சாலை

## நிதி மோசடி விசாரணை இரகசியப் பொலிஸ் வசம்

(கொழும்பு)
பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தின் போது றப்பர் தொழிற்சாலையின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பாக விசாரிக்கும் பொறுப்பு இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

றப்பர் தொழிற்சாலையின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட 100 கோடி ரூபா உரியவாறு பயன்படுத்தப்பட்டதா என்பது குறித்த விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்புஇது வரை காலமும் குற்றப்புலனாய்வு பொலிஸாரின் கையில் இருந்தது.

இது தொடர்பாக பொலிஸ் மா அதிபரிடம் உள்ள அறிக்கைகள அனைத்தும் தற்போது இரகசியப் பொலிஸாரிடம ஒப்படைக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த 100 கோடி ரூபா நிதியில், 200 மில்லியன் ரூபா செலவில், புளத் சிங்களப் பகுதியில் றப்பர் பொருள்கள உற்பத்தித் தொழிற்சாலை நிறுவத் திட்டமிடப்பட்டிருந்தது.

ஒதுக்கிய நிதி மூலம் அத்திவாரம் மாத்திரமே பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் இடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான நிதி மோசடிகளை கண்டுபிடிக்கும் பொறுப்பே குற்றப் புலனாய்வு பொலிஸாரிடமிருந்து இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (உ-8)

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

குறள்

வலம்புரி

## பிரதமரின் உறுதியுரை

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்டது போல் ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் பொதுஇடங்களில் இருக்கும் படையினர் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 2 ந் திகதிக்கு முன்னர் அங்கிருந்து வெளியேறிவிடுவர் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா உறுதியளித்துள்ளார்.

நேற்று முன்தினம் தம்மைச் சந்தித்த தமிழ்க் கூட்டமைப்பு எம்பிக்களிடமே பிரதமர் இவ்வாறு உறுதி வழங்கியுள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி நூறுநாட்களுக்குள் பொது இடங்களில் இருந்து 'படையினர் வெளியேற வேண்டுமென்பதே ஒப்பந்தத்தின் நிபந்தனையாக இருந்த போதிலும் பல்வேறு பிரச்சினைகள், நடைமுறைச்சிக்கல்கள் காரணமாக நூறு நாட்களுக்குள் அதனை நடைமுறைப் படுத்தாமல் போயிருக்கலாம். ஆனால் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிகளிடம் பிரதமர் வழங்கிய உறுதியுரையின் பிரகாரம் ஆகஸ்ட் 2 ந் திகதிக்கு முன்னர் படையினர் பொது இடங்களில் இருந்து முழுமையாக வெளியேறுவார்களாயின் அதனை ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் பிரதமரின் உறுதியுரையை படையினர் எந்தளவு தூரம் நடைமுறைப்படுத்துவர் என்பதுகேள்விக்குரியதே.

அரசும் - விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், அதனை நடைமுறைப் படுத்தி சமாதானப் பேச்சுவார்த்தை மேசையில் இருதரப்பும் சந்திப்பதே, நிரந்தர சமாதானத்திற்கு வழிகோலும்.

அதேவேளை கடந்த பல ஆண்டுகளாக சிறைகளில் வாடும் தமிழ்க் கைதிகளின் விடுதலை குறித்தும் அரசு காத்திரமான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வது மிக மிக அவசியமாகும்.

வருடக்கணக்கில் விளக்கம், விசாரணை எதுவுமின்றி சிறைகளில் வாடுகின்ற தமிழ்க் கைதிகளின் விடயத்தில் எவரும் அக்கறைப்படுவது போல் தெரியவில்லை. எனவே அவர்களின் விடயத்திலும் அரசு அக்கறை எடுத்து அவர்களின் விடுதலைக்கு உதவ வேண்டும்.

# பன்னூற் புலவர் முன் பல்புகழ் நிறுவித் திகழ்ந்த
# புலவர் மணி க.சு. நவநீதகிருஷ்ண பாரதியார்

## மறைந்தார் மாண்பு

தண்டமிழ் மன்னரும், சைவமாதவரும் தழைத்தினிதிருந்தது சோழவளநாடு. அச்சோழநாட்டுக் கண்ணபுரத்தில் செந்தண்மைபூண்டொழுகும் சவுணியர் மரபில் தோன்றியவர் நவநீத கிருஷ்ண பாரதியார். இவர்தம் குல மரபுப்படிஆரியமும், செந்தமிழும் பயின்று ஆரறிவு பெற்றவர். மதி நுட்பம் நூலோடுடைய அரசஞ் சண்முகனார் முதலான பேராசிரியர்களின் தொடர்பு,இவர் பன்னூற் புலவர் முன்பல்புகழ் நிறுவித் திகழக்காரணமாயிற்றென்ப. அந்நாள் வேந்து மொழியிலும், விண்ணவர் மொழியிலும்,செந்தமிழ் மொழியிலும் தேர்ந்த நூற்புலமை சான்ற ஈழ நாட்டின் முடிசூடாமன்னர் சேர் பொன். இராமநாதன். அவருடைய கலைச் சேவைக்குப் பெருவிளக்குகளாக நின்று நிலவுவன. அவர் சுன்னாகத்திலும், திருநெல்வேலியிலும், மகளிர்க்கும், மைந்தர்க்கும்நிறுவிய இராமநாதன் கல்லூரியும்பரமேஸ்வராக்கல்லூரியும் இப் பேர்நிலையங்கள் இரண்டிலும் இராமநாதன்ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் தமிழ்ப் பேராசிரியராயிருந்த பெரும் பேற்றாளர் நவநீத கிருஷ்ணபாரதியார்ஒருவரே.

நூல்கள் ஆக்கம்

சங்கச் சான்றோர் செய்யுளோடொப்ப நின்று நிலவும் தகைத்ததாய், மூவியலான் நாற்பொருளும் தெருட்டும் உலகியல் விளக்கம் என்னும் நன்னூல் தந்த வள்ளன்மையார் பாரதியார். இதுவன்றி, பறம்பு மலைப்பாரி, செழுங்கதிர்ச் செல்வம், திருவடிக் கதம்பம் முதலியனவாகத் தமிழாலளித்த நூல்களும் பல. பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டக் கருங்கல் மனமும் கசிந்துருகி உய்க்க மணிவாசகனார் யாத்த திருவாசகத் தேனுக்கு. பாரதியார் வகுத்த நல்லுரை நுட்பம் கற்றோர் கவர்வதாகும். பாரதியாரின் நாவன்மையோ அவரைப் பலரும் பெருநாவலர் எனப் புகழ வைக்கும் தன்மையது. யாழ்ப்பாணம் ஆரியதிராவிடபாஷாபிவிருத்திச் சங்கத்திற்கும் பாரதியாருக்கும் உள்ள தொடர்பு பல திறப்பட்டது. சங்கச் சார்பில் நடக்கும் மொழியாக்கப் பணிகளுக்கெல்லாம் இவருடைய அரிய சேவை கிடைத்தமையைச் சங்கம் பலகாலும் பாராட்டியுள்ளது.

நூல், உரை, போதகாசிரியரென்னும் முத்திறத்தும் பெரும் புகழ்நிறுவிய இவர்க்கு ஈழ நாட்டன்பர்கள் பொற்கிளியளித்துச் சிறப்புச் செய்தார்கள். யாழ்ப்பாணம் ஆரிய, திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தார் சங்கத்தின் இருபத்தொன்பதாவது ஆண்டு நிறைவு விழாவுடன் நடத்திய முதலாவது விசேட பட்டமளிப்பு விழாவில் (1- 12- 1952 ல்)புலவர்மணி என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தனர்.

கம்ப சூத்திரம்

கம்பசூத்திரம் ஒன்றுக்கு நவநீத கிருஷ்ணபாரதியார் விரிக்கும் உரை விளக்கம் இலக்கிய ரசனையுள்ளவர்களுக்கு ஆவலை யூட்டுவதாய் அமைந்துள்ளதைக் காண்போம்.

விசுவாமித்திர முனிவன் இராம, லக்குமணர்களைத் தனது வேள்வியைக் காக்குமாறேவ, அங்ஙனமே அவர்களும் அவ் வேள்வியைக் காத்தனர்.

''எண்ணுதற் காக்கரி
திரண்டு மூன்று நாள்
விண்ணவர்க்காக்கிய
முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற
மன்னர் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற
இமையிற் காத்தனர்''
(கம்பராமாயாணம் பாலகாண்டம்)

பொழிப்புரை

மண்ணுலகத்தைக் காத்து வருகின்ற மன்னனாகிய தசரதச் சக்கரவர்த்தி, மக்களாகிய இராம, லக்குமணர் இருவரும், விண்ணவர்பொருட்டு ஆறு நாட்கள் விசுவாமித்திர முனிவன் செய்த (இராம லக்குமணர்கள் உதவியின்றித் தன்னாலும் அதனைச் செய்வேனென) நினைத்தற்கும், செய்தற்கும் அருமையுடையதாயிருந்த வேள்வியைக் கண்ணைக் காக்கின்ற இமை போலக் காப்பாராயினர்.

விளக்கவுரை

அவ் வேள்வியைக் காத்தற்குரியவன் தசரதச் சக்கரவர்த்தியே ஆவான் என்பதும், விசுவாமித்திர முனிவன் அவ்விருவர்களையும் அம்மன்னனை வேண்டிப் பெற்றுக்கொண்டமையால் அவரும் காக்குமாறுபுக்கனர் என்பதும் புலப்பட '' மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்'' என்றார்.

'' எண்ணுதற்காக்கரிது '' என்னும் இதனை, இராம இலக்குமணர் வேள்விகாக்கின்ற காவற்குச் சிறப்பினதாகக்கொள்ளின், அச்சிறப்புத்தான் ''கண்ணினைக் காக்கின்ற இமையில்'' என்னும் உவமத்தாற் பெறப்படுதலின் அஃதமையாதென்க.

படை ஊற்றம்

அகப் பகையாகியகாமவெகுளிகளையும், புறப்பகைஞர்களாகிய நிருதர்களையும் ஒறுத்தடக்கினல்லது தன் வேள்வி நிறைவு பெறாது, அங்ஙனம் ஒறுத்தடக்க வல்லவன் இராமன் ஒருவனேயாவான், அவனோ சிறுவன், அவன்தந்தையாகிய தசரதன் அவனைக் கண்ணினுமேலாகப்பேணிக் காத்து வருகிறான். தசரதனைவேள்வி காத்தற்கு நின்கரியசெம்மல் ஒருவனைத் தந்திடுதி என வேண்டின் அவனும் ''இவன் படைஊற்றம்இலன்; அன்றியும்சிறியவனும்ஆவான்; அதலால் அவனை விடுக்க. படையூற்றஞ் சிறந்துஅவனிற் பெரியவனும் மண்காக்கின்ற உரிமையுடையேனும் ஆகிய யான் வேள்விகாப்பேன், எழுக'' என்றுகூறிவிடுவான், ஆதலின்அதனைப்பற்றி இயம்புதற்கும், நினைத்தற்கும், ஆற்றற்கும் அரிய தொன்றாக முன் இருந்த வேள்வியானது துணிவுபெற்று அவன்பால் இயம்பி அவ்விருவரையும் பெற்றுக்கொண்ட பின்னர் எண்ணற்கும், இயம்பற்கும், ஆற்றற்கும் எளியதொன்றாக இருந்ததென இசையெச்சம் விரித்துக் கொள்க.

விண்டுவே வேள்வி வேள்வியே விண்டுஎன்றாங்கு மறை கூறும், கண்ணும், இமையும் தோற்றத்தான் வேறு வேறாகக் காணப்படினும் அவ்விரண்டும் ஓர் உறுப்பாகவே கொள்ளப்படும். விண்டுவே இராமன் ஆதலின் இராமனது வடிவமும் வேள்வியும் வேறு வேறுஎனத் தோற்றம் பெறினும் அவ்விரண்டும்ஒன்றெனவேபடும். கண்ணை இமைகாப்பதும், வேள்வியை இராமன் காப்பதும் தன்னைத்தான் காக்கும் பகுதியாகவே அடங்கும்.

வேள்வியின் அவியை நுகர்தலின் தலைமையுடையோன் விண்டுவாகலின், அவனே தன் உணவைத்தானே காக்கப் போந்துளான் என்பது நினைவு கூரற்பாலது.

விரிப்பும் மறுப்பும்

இலக்குவனும் ஆதிசேடனாகலின் அவனும் அவனது உறுப்போடு ஒன்றுபட்டவனே ஆதல் வெளிப்படை, கண்ணினைக்காக்கின்ற இமை என்னும் உவமத்தை பிற்காலத்தார் தாம் வேண்டியவாறே விரித்துப்பயன் வற்றுவர், அவர் விரிப்பும், மறுப்பும் வருமாறு:

மேலிமை, கீழிமை என்னும் இரண்டினுள் மேலிமை பெரிது, கீழ் இமை சிறிது அன்றியும், மேலிமை அசைந்து கொண்டிருப்பது கீழிமை அசையாமல் இருப்பது. மேலிமை போல அவருட் பெரியவனாகிய இராமன் நிலை பெயர்ந்து கௌசிக முனிவன் ஆச்சிரமத்தின் நாற்றிசையும் அரக்கர்கள் புகுந்து வேள்விக்கிடையூறு விளைக்காவண்ணம் சக்கரஞ்சுழல்வது போலச் சுழன்று திரிந்து காவல் செய்தான். கீழிமை போல் அவ்விருவருட் சிறியோனாகிய இலக்குவன் உள்ளே எவரும்புகாவண்ணம் அவ்வாச்சிரமத்தின் வாயிற் கண் அசையாது காத்து வருகின்றான். அவ் வகையாகக் காவல் செய்யும் இருவருள் இராமன் ஆச்சிரமத்தின் புறத்தில் சுற்றிவரும் போதெல்லாம், மேலிமை கீழிமையை இமைத்து இமைத்துத் தீண்டி வருவதுபோல் அவ் வாயிலில் நிற்கும் இலக்குவனைக் கையினால் அடிக்கடி தட்டி 'இலக்குவ! காத்தலிற் கருத்தூன்றுக, என்று எச்சரித்து வந்தான் என்று அவ்வுவமையை விரித்துக் கூறுவர்.

கண்ணானது வேள்விக்கும் கண்ணுட் கருமணி வேள்விப் புகைக்கும் ஒப்பாகும் எனவும் அவ்வுவமத்தை அவ் விரிப்பினும் பெருவிரிப்பாக யானும் இளமையிற்கேட்டுள்ளேன். இன்னோரன்ன பகற்கனவுகளெல்லாம் முழுதும் வீணாக வற்றும்படி இதனது அடுத்த பாட்டின் முதற்பகுதியாகிய 'காத்தனர் திரிகின்ற காளை வீரரில் என்னும் தூதுவன் நம் துயிலை எழுப்பி விடுகின்றான். வேள்வியைக் காத்தவராகித் திரிகின்றனர்' அவ்விருவரும் என்பது அத்தூதன்தன் எடுப்புரை, வறியோன் ஒருவன் கனவின் கண்தான் அரசாளக் காண்கையில் அவனது இல்லம் தீக்கதுவி எரிகையின் வெப்புத்தாக்கித் துயிலுணர்திய வாறே இத் தூதனும், நம்மைத்துயிலெழுப்பினான் என்று சுழன்றடங்குவதே சருமம், பைந்தமிழ் வாழ்க, நவ நீதகிருஷ்ணபாரதியாரின் நாமம் நிலைப்பதாகுக. ●

நன்றி கலாநிதி

## சாயி அருளமுதம்



சமூக சேவை செய்வோர், தமக்குச் சம்பவிக்கக்கூடிய பாரதூரமான சில விஷயங்களையிட்டு மிகவும் எச்சரிக்கையுடனிருக்க வேண்டுமென்பதைக் கூறி வைக்கிறேன். முதலாவதாக உங்கள் சொந்தமனத்தைச் சுத்தப்படுத்தி அதன் பின் மற்றவர்களுக்கு அறிவுரை வழங்குங்கள். மனோபலத்தையும், மன அமைதியையும் நீங்கள் முதலில் பெற்றுக் கொண்டு அதன் பின் மற்றவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்க முயலுங்கள்.

நித்தியமான ஆனந்தத்தை அடையும் இரகசியத்தை நீங்கள் கற்று அதன் பின் மற்றவர்களைச் சந்தோஷப்படுத்தப் பிரயத்தனம் செய்யுங்கள். உண்மையான அவயவத்தையன்றிச் செயற்கை அவயவத்தை நாடாதீர்கள், இப்போதிருக்கும் நோயைத் தணிக்க உதவும் வைத்தியரை நாடாமல் 'இனிமேல் உனக்கு நோய்வர மாட்டாது' என நிச்சயப்படுத்தும் வைத்தியரிடம் செல்லுங்கள்.

நன்றி
- நாளாந்த நற்சிந்தனை

## அரை நிரந்தர வீடுகள் உரியவர்களிடம் கையளிப்பு

(மானிப்பாய்)

யாழ்.மாவட்டத்தில் இடம் பெற்றஇராணுவநடவடிக்கைகள் காரணமாக கடந்த 10 வருடங்களுக்குமுன்னர் தெல்லிப்பழை மயிலிட்டிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள20குடும்பங்களுக்கு புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்பட்ட அரை நிரந்தர வீடுகளை யாழ்.செயலகம் பயனாளிகளிடம் கையளித்துள்ளது.

இந்த வீடுகளை மாகியப்பிட்டி கொம்பனிப்புலம் முகாமிலுள்ள 10 குடும்பங்களும், மானிப்பாய் தியாகர் முகாமிலுள்ள 6 குடும்பங்களும் சுதுமலையிலுள்ள 4 குடும்பங்களும் பெற்றுக் கொண்டன. (உ-120)

# நேரடிப் பேச்சுக்கு அரசு முன்வந்தால்

# புலிகள் பூரண ஒத்துழைப்பு வழங்குவர்

## கரிகாலன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையை நிறைவேற்ற அரசு துரித நடவடிக்கையை மேற்கொள்ளுமாக இருந்தால், அதற்கு சகல ஒத்துழைப்புகளையும் வழங்க விடுதலைப்புலிகள் தயாராக இருப்பதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

யுத்த நிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில முக்கிய விடயங்கள் காலதாமதமாகிக் கொண்டிருக்கும் அதேவேளை மற்றும் சில விடயங்கள் மந்தகதியில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. எனினும் விடுதலைப்புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தையை அரசு ஆரம்பிக்க முன்வருமானால் அதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்க புலிகள் தயாராக உள்ளனர்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வரி அறவிட முடியுமெனக் குறிப்பிடப் பட்டுள்ளது. அதன் அடிப்படையிலேயே வரி அறவிடும் நடவடிக்கைகள் இடம்பெறுகிறது. முஸ்லிம்களிடம் இருந்து வரி அறவிடப்படக் கூடாது என உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள போதிலும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் வரும் முஸ்லிம்களிடம் வரி அறிவிடப்பட முடியுமென்ற ரீதியிலேயே குறிப்பிட்ட வரி அவர்களிடம் இருந்து அறவிடப்படுகிறது என்றும் குறிப்பிட்ட கரிகாலன்,

வாழைச்சேனையில் அண்மையில் இடம்பெற்ற சம்பவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் எந்த விதமான தொடர்பும் இல்லை. இது சகலரும் அறிந்த உண்மை.

வேறெந்த மாவட்டத்திலும் இல்லாதவாறு கிழக்கு மாகாணத்தில் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே சிறந்த உறவு நிலவுவதாகவும் கரிகாலன் மேலும் கூறினார்.

(வ)

---

### அமைச்சர் ஜயலத்...

வருகை தரவுள்ளனர்.

யாழ் வரும் இவர்கள் மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களை சென்று பார்வையிடுவதுடன் யாழ் மாநகரசபையின் வேலைத் திட்டங்களுக்கு யாழ் மாநகர சபையின் வேலைத் திட்டங்களுக்கு அவசியமான உத விகள் குறித்து யாழ் மேஜர் எஸ். கந்தையனுடன் கலந்துரையாடவுள்ளனர்.

(இ-19-6)

---

### தமிழக மீனவர்...

இந்தியக் கடற்படையினரிடம் கையளிக்குமாறு காரைநகரிலுள்ள கடற்படையின் வடமாகாண கட்டளைத் தளபதிக்கு நேற்று யாழ் மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.(ந-5)

---

### கடற்புலிகளின்...

கடற் புலிகளின் விசேட அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்ட விடுதலைப்புலிகளின் தலைவர் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் வைக்கபபட்டிருந்த மாவீரர்களின திருவுருவப் படங்களுக்கு பொது ஈக சுடரினை ஏற்றி வைத்தார்.

அத்துடன் மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர் மாலை சூடி அஞ்சலி செலுத்தினார். இதனையடுத்து கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை உரை நிகழ்த்தினார்.தொடர்ந்து கலை நிகழ்வுகளும இடம்பெற்றன. (இ)

---

### காரைநகரில்...

வீதி எங்கும் வீடுகளுக்கு முன்னால் பூரண கும்பம் வைத்து மக்கள் மகிழ்ச்சியுடன் புலிகளை வரவேற்றனர்.

யாழ்ற்றன் கல்லூரி மண்டபத்தில் காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆ. சிற்றம்பலம் தலைமையில் வரவேற்புக் கூட்டம் இடம்பெற்றது.

இவ் வரவேற்பு நிகழ்வில் புலிகளின் காரைநகர் பிரதேசப் பொறுப்பாளர் மாதுலன், தீவக அரசியல் பிரமுகர் அருந்தவம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். (இ-246)

---

### சுயாதீன...

அளித்தனர்.

இதேவேளை இவ்விசாரணையின் போது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் சமுகமளித்திருந்தபோதும் அவர்களிடம் இருந்து எந்தவிதமான வாக்குமூலமும் பெறப்படவில்லை. எனினும் இது தொடர்பாக விசாரணைக்குழு அவர்களுடன் கலந்துரையாடியது.

நேற்றைய விசாரணையின்போது புலிகளின் தரப்புப் பிரதிநிதி சி.வி.கே. சிவஞானமும் சமுகமளித்திருந்தார். விசாரணை மீண்டும் இன்று தொடரும்.(வ-06)

---

### ஐரோப்பிய நாடுகளின்...

மற்றும் தொல்காப்பியன், ஜோர்ஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்களுக்கு அமைவாக அவற்றை உடனடியாக நடைமுறைப் படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று புலிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக தமது முழுமையான ஆதரவை வழங்குவதாக ஐரோபிய நாடுகளின் தூதுவர்கள் விடுதலைப்புலிகளிடம் உறுதியளித்தனர். (வ)

---

### அனுருத்த...

சம்பந்தமாக முன்னாள பிரதிபாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்தவத்த அவரது இரு புதல்வர்கள் உட்பட 15 சந்தேக நபர்கள் மீதுகண்டி மேல் நீதிமன்றில் 72குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(வ)

## வயிற்றோட்டத்தால் சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

வயிற்றோட்டம் காரணமாக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நான்கு வயதுச் சிறுவன் நேற்று வைத்தியசாலையில் உயிரிழந்தான்.

யாழ் அசாத்லேன் ஐந்து சந்தியைச் சேர்ந்த சிவகுமார் சிந்துஜன் என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

இச் சிறுவன் திடீர் வயிற்றோட்டம் காரணமாக நேற்று முன்தினம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். (இ-02)

## வை.கோவை விடுவிக்கக்கோரி 23ம் திகதி உண்ணாவிரதம்

### வவுனியாவில் நடத்த ஏற்பாடு

(வவுனியா)

பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை. கோபாலசாமியை விடுவிக்கக் கோரி 23ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை வவுனியா நகரசபை மைதானத்தில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பினர் நடத்தவுள்ளனர்.

வவுனியா நகரசபை மைதானத்தில் காலை 7மணிமுதல் மாலை 6மணி வரை நடைபெறவுள்ள இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தமிழ்க் கட்சி கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.

உண்ணாவிரத முடிவில் பொதுக் கூட்டம் நடத்தப்பட்டு தமிழக முதல்வருக்கான மகஜர் ஒன்று வவுனியா அரச அதிபர் மூலமாக இந்தியத் தூதுவரிடம் கையளிக்கப்படும்.

(வ)

## தமிழ்நாட்டு அரசியலில் கூட்டமைப்பு தலையீடு

### கண்டிக்கிறது ஈ.பி.டி.பி

(கொழும்பு)

தமிழ்நாட்டு அரசியலில் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு தலையிடுவது தேவையற்ற ஒரு செயல் என் ஈ.பி.டி.பி கண்டித்துள்ளது.

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கேவை தமிழ் நாட்டரசாங்கம் கைது செய்தது இந்திய அரசின் சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்ட விடயமாகும். இக் கைது விவகாரம் தற்போது நாட்டில் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான நடவடிக்கைகளை பாதிக்காது.

இதனால் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் உண்ணாவிரதங்களையும், எதிர்ப்புப் போராட்டங்களையும் நடத்துவதற்காக மக்களை அதில் ஈடுபடுத்துவது மக்களை தவறான வழியில் இட்டுச் செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த.8)



கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தில் அண்மையில் கணனி அலகு திறப்பு விழா இடம்பெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினர் இ.விஜயகுமார் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் சங்கத் தலைவர் த.சசிகரன், கிராம சேவகர் சு.முத்துக்குமாரசுவாமி, வலி கிழக்கு பிரதேச சபைச் செயலர் எஸ்.குகதாசன், சங்கக் காப்பாளர் கள்ளியூர் நடராஜா உறுப்பினர் கே.அன்னலிங்கம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## மரண அறிவித்தல்

### விஸ்வநாதன் விஜயகரன் (விஜயன்)

கொல்லங்கலட்டி கிளானையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட **விஸ்வநாதன் விஜயகரன் (விஜயன்)** 7-7-2002ல் கனடாவில் அகாலமரணமானார்.

இவர் காலஞ்சென்ற விஸ்வநாதன், விமலாம்பிகையின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற விஜயலட்சுமி, விஜயேந்திரன் (விஜி பிரான்ஸ்), விஜயகுமார் (ராசா, பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இளமுருகனின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.07.2002) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தாவடி மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:-
பாடசாலை வீதி
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்
கணேசலீங்கம் (லீங்கம்)
கொல்லங்கலட்டி

[C/4672]

**கிறிஸ்ரல் சென்ரர் நெல்லியடி**

**கணிதப் பிரிவு ஆரம்பம்**
**A/L DAY, 2003, 2004**

இணைந்த கணிதம்
திரு. அம்பி
இரசாயனவியல்
திரு. செந்தில்வடிவேல
பௌதிகம்
திரு. சந்திரப்பிரகாஷ்

✠ 40 மாணவர்களுக்கு அனுமதி
✠ 21/07/2002 வரை அனுமதி வழங்கப்படும்.

[5697]

**பிறந்த நாள்வாழ்த்து**

நல்லூர், செல்லர் வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை தொழில்சார் வதிவிடமாகவும் கொண்ட

**DR. PARAMASIVAM SIVAKUMAR**

[M.B.B.S, FRCP, FRCPCH, DCH (Lond)]

தனது பிறந்த தினத்தை இன்று கொண்டாடுகிறார். அவரை அப்பா, அம்மா, சகோதரர், சகோதரி, மைத்துனர், உற்றார், உறவினர், நண்பர்கள் நீடூழி வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

107, செல்லர் வீதி,
நல்லூர்.

[C/4671]




**பிராந்திய கோழிப்பண்ணை ~ அச்சுவேலி**
**புதிய இனக்கோழிக்குஞ்சு விநியோகம்**

எமது இன விருத்திப் பண்ணையில், பிரான்ஸ் நாட்டு தாய் இனக் கோழிகளில் இருந்து அடைவைத்து பொரிக்கப்பட்டு கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் தரநிர்ணயம் செய்யப்பட்ட ஒரு நாள் கோழிக்குஞ்சுகள் 20.07.2002ல் இருந்து வாரம் தோறும் கால்நடை வளர்ப்போருக்கு, அவ்வப் பகுதி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக விநியோகிக்கப்படவுள்ளது.

எனவே தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு உங்கள் பகுதி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொண்டு கோழிக்குஞ்சுகளை பெற்றுக்கொள்ளவும்.

75, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்

பொதுமுகாமையாளர்,
யாழ் மாவட்ட கூ.கி.வ.சமாசம்

(C/4673)

**கூடைப்பந்தாட்டப் போட்டி - 2002**

11ஆவது வருடாந்த நிகழ்வாக **யாழ் ஹற்றன் நஷனல் வங்கியினால** நடாத்தப்படும் ஆண்டு 2002ற்கான கூடைப்பந்தாட்டப் போட்டி கழகங்கள்/பாடசாலைகளுக்கிடையே **இன்று (18.07.2002) வியாழக்கிழமை முதல் யாழ் இந்துக்கல்லூரி** ஆடுகளத்தில் ஆரம்பமாகும் என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தந்து போட்டிகளை கண்டுகளிக்க வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நேரம் பிற்பகல் - 3.30 மணி

**ஹற்றன் நஷனல் வங்கி**
**உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி**

**இன்று மோதும் அணிகள்**

Jaffna Hindu College Vs Jaffna Central College (B) - 4.00 P.m
Jaffna Central College (A) Vs Jaffna Central College (C) - 5.00 P.m

[C/4674]

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.07.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.